பக்கங்கள் – 16 | விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 கதிர் : 168 | 14 மே 2025 புதன்கிழமை | சித்திரை 31 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## உலக சதுரங்கப் போட்டியில் இணுவில் சிறுமிக்கும் இடம்!

### நிதி அனுசரணைக்கு தந்தை கோரிக்கை



யாழ்ப்பாணம், மே 14

இணுவில் பகுதியைச் சேர்ந்த தர்சன் கஜிசனா என்ற சிறுமி, 8 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் குறித்த சிறுமியின் தந்தை தெரிவித்ததாவது:

எட்டு வயதுக்குட்பட்ட உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிக்கு எனது மகள் ☞15

## அமைச்சரவையில் மாற்றங்களில்லை!



கொழும்பு, மே 14

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தற்போதைய அமைச்சரவையில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடி ☞15

## கிளிநொச்சி உள்ளூராட்சிசபைகளுக்கு தவிசாளர்களை பெயரிட்ட தமிழரசு

கிளிநொச்சி, மே 14

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களிலும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அந்தச் சபைகளுக்கான தவிசாளர் மற்றும் உபதவிசாளர் ஆகியோரை பெயரிட்டுள்ளது. மேற்படி மூன்று சபைகளுக்குமான தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவு நேற்றுமுன்தினம் காலை கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் ☞15

# செம்மணி மயானத்தில் நாளை அகழ்வுப்பணி!

### ஏற்பாடுகள் அனைத்தும் நிறைவு



யாழ்ப்பாணம், மே 14

அரியாலை - செம்மணி சிந்துபாத்தி மாயானத்தில், மனிதச் சிதிலங்கள் அவதானிக்கப்பட்ட பகுதிகளில் நாளைமுதல் அகழ்வுப் பணிகள் இடம்பெறவுள்ளன. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முழுமையடைந்துள்ளன. ☞15

பாலியல் கொடுமைகளுக்கு கடும் தண்டனை தேவை!
(பக்கம்: 06)

நான்கு சபைகளில் ஆட்சிக்கு முனைவோம்
கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு
(பக்கம்: 03)

அமெரிக்க வரிகள் காரணமாக 1,000,000 இலங்கைப் பெண்கள் வேலைகளை இழக்கும் அபாயம்
(பக்கம்: 08)

## சம்பளம் வழங்கப்படாததால் கடும் அவதியில் ஊழியர்கள்

### இ.போ.ச. வவுனியா சாலையில் சம்பவம்

வவுனியா, மே 14

இலங்கை போக்குவரத்துச்சபையின் வவுனியா சாலை ஊழியர்களுக்கான மாத சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வவுனியா சாலையில் பணிபுரியும் சாரதிகள், காப்பாளர்கள், பொறியியலாளர்கள் ஆகியோருக்கான ஊதியமே இதுவரை வழங்கப் ☞15

## கொழும்பு மாநகரத்தை கைப்பற்றியே தீருவோம்

### ஐக்கிய மக்கள் சக்தி உறுதி!



கொழும்பு, மே 14

கொழும்பு மாநகரசபையில் அரசாங்கத்தை ஆட்சியமைக்கவிடப்போவதில்லை. அந்தச் சபையை நாங்கள் கைப்பற்றியே தீருவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனித்து ஆட்சியமைக்க பெரும்பான்மை இல்லாத சபைகளில் அரசாங்கம் ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சி ☞15



"இந்தமுறையாவது செம்மணிக்க புதைஞ்ச உண்மையள் வெளியால வருமோ?"

## இலங்கையின் ஊழல்களுக்கு இரையாகியுள்ளது ஜப்பான்!

### ஜப்பானியத் தூதுவர் காட்டம்



கொழும்பு, மே 14

இலங்கையின் ஊழல், மோசடிகளுக்கு ஜப்பான் இரையாகியுள்ளது. இலங்கையில் நம்பிக்கையானதும் வெளிப்படையானதுமான சூழல் இல்லை என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாடா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மாநாடொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, ☞15



# இறக்குமதித் தாமதத்தால் உப்புக்குப் பற்றாக்குறை

*உப்பு உற்பத்தியாளர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, மே 14

இறக்குமதிசெய்யப்பட்ட உப்பு நாட்டை வந்தடைவதில் ஏற்பட்டுள்ள தாமதமே உப்புத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று உப்பு உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

30 மெட்ரிக்தொன் உப்பை இறக்குமதிசெய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருந்தது. ஆனால் இறக்குமதிசெய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் சந்தையில் உப்புக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்று உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இறக்குமதிசெய்யப்பட்ட உப்பு எதிர்வரும் வாரத்துக்குள் நாட்டை வந்தடையும். அதன்பின்னர் உப்புக்குத் தட்டுப்பாடு நிலவாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, உப்பு விலை அதிகரிப்புத் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

# தடையேற்படுத்தினால் பதிலடி கொடுக்கப்படும்

*ரில்வின் சில்வா வாய்சவடால்*



**கொழும்பு, மே 14**

**தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்குத் தடை ஏற்படுத்தினால் அதற்கான பதிலடி கொடுக்கப்படும் என ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அமைக்க எதிர்க்கட்சிகள் தடையை ஏற்படுத்தினால் எதிர்க்கட்சிகளுக்கும் எதிர்த்தாக்கங்கள் ஏற்படலாம்.

மக்கள் விருப்பத்துக்கிணங்க அதிகாரம் அமையவேண்டும். இடையூறு ஏற்படுத்தக்கூடாது.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றது தேசிய மக்கள் சக்தியே. நாம் 267 சபைகளில் வெற்றிபெற்றுள்ளோம். அதில் 120 இடங்களில் எந்தவொரு சிக்கலும் இல்லாமல் சபைகள் அமைக்கலாம்.

அத்துடன், 32 சபைகளில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், அங்கும் பிரச்சினை இல்லாமல் சபைகள் அமைக்கமுடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி 14 சபைகள் பெற்றிருந்தாலும், அவற்றில் 13 இடங்களில் தனியாக சபைகள் அமைக்கமுடியாத நிலைமை உள்ளது. மற்றைய கட்சிகள் ஒன்றிணைய முடியாமலுள்ளதால், பல இடங்களில் அதிகாரம் அமைப்பது அரசாங்கத்துக்கே சாதகமாக உள்ளது. கொழும்பு மாநகரசபையில் 11 ஆசனங்கள் போதவில்லை. எனினும், சுயேச்சைக் குழுக்களுடனும் பிற கட்சிகளுடனும் பேச்சுகள் நடைபெற்றுவருகின்றன- என்றார். (ச-இ)





நல்லூரடியில் அமைக்கப்பட்டுள்ள தியாகதீபம் திலீபனின் நினைவாலயத்துக்கு முன்னால் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சி நேற்று வழங்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது அமைப்பின் ஏற்பாட்டில் இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் முன்னெடுக்கப்பட்டது. இதில் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், பொது அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இணைந்திருந்தனர். (ச-27)

# றம்பொடை விபத்துக்கு தூக்கக்கலக்கமே காரணம்

கொழும்பு, மே 14

இறம்பொடையில் நடந்த பஸ் விபத்துக்கு, அதிகளவான பயணிகளை ஏற்றியமை, அதிக களைப்புக் காரணமாக சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டமையே காரணம் என்று நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகனப் பரிசோதகர் ஜாலிய பண்டார தெரிவித்துள்ளார்.

விபத்தில் சிக்கிய பஸ்ஸில் இயந்திரக்கோளாறு ஏற்படவில்லை என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, இந்த விபத்தில் உயிரிழந்த நான்கு பேரின் உடல்கள் கொத்மலை மருத்துவமனையில் இருந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# துஷ்பிரயோகம்; ஆசிரியர் கைது

கொழும்பு, மே 14

மாணவி ஒருவரைத் தகாத முறைக்கு உட்படுத்திய ஆசிரியர் ஒருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர். தெவினுவரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த ஆசிரியர் ஆங்கில பாட ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# 40 சபைகளில் ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திட்டம்

கொழும்பு, மே 14

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளின்படி 40 சபைகளில் எம்மால் ஆட்சியமைக்க முடியும். சுமார் 100 சபைகளில் எமது ஆதரவின்றி எவராலும் ஆட்சியமைக்கமுடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உள்ளூராட்சிமன்றங்களில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் சபைகளை நிறுவுதல், கூட்டணியமைத்தல் தொடர்பாக அரசியற் குழுக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. கட்சியின் கொள்கைரீதியான தீர்மானத்துக்கமையவே உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவர். வேட்புமனுத் தாக்கலின்போது இடம்பெற்ற தவறுகளை நிவர்த்திசெய்துகொண்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஏனைய கட்சிகள் சபைகளை அமைப்பதற்கு எமது ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். சில உள்ளூராட்சிமன்றங்களில் ஏனையோரின் ஒத்துழைப்புடன் எமக்கு ஆட்சியமைக்கக்கூடிய நிலைமைகூட காணப்படுகிறது. சில தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன- என்றார். (எ-இ)

# காலி மாநகரசபையை கைப்பற்ற கடும் போட்டி

கொழும்பு, மே 14




காலி மாநகரசபையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக பிரதான அரசியற்கட்சிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காலி மாநகரசபையில் தேசிய மக்கள் சக்தி கட்சி 17 ஆசனங்களை வென்றபோதும், ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சி அரசியற்கட்சிகள் 19 ஆசனங்களை வென்றுள்ளன. இதனால் மாநகரசபையில் அதிகாரத்தை நிறுவுவதில் அதிகாரப் போட்டி உருவாகியுள்ளது.

காலி மாநகரசபையில் அதிகாரத்தை நிலைநாட்ட தேசிய மக்கள் சக்தி கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை பல்வேறு உத்திகளைக் கையாண்டு வருகின்றன என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பதவிப் பங்கீடு தொடர்பாக எதிர்க்கட்சி அரசியற்கட்சிகளிடையே கருத்துமோதல்கள் எழுந்துள்ளன என்றும் அந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (எ-இ)

# நான்கு சபைகளில் ஆட்சியமைக்க முனைவோம்



## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

**பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை, சாவகச்சேரி நகரசபை, ஊர்காவற்றுறைப் பிரதேசசபை ஆகிய நான்கு சபைகளிலும் தவிசாரளர் பதவிக்காக எமது உறுப்பினர்களைக் களமிறக்குவோம் என்று தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் தையிட்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-ஏனைய சபைகளில் கூடுதலான வாக்குகளைப் பெற்ற, தமிழ்த்தேசிய நிலைப்பாடுடன் உள்ள கட்சிக்கு ஆதரவு தேவைப்படும் பட்சத்தில் வழங்குவோம். தமிழ்த்தேசியம் சார்ந்த ஓர் இணக்கப்பாடு இல்லாமல் வெறுமனே கதிரைக்காக சபைகளைக் கைப்பற்றும் நோக்கில் செயற்படுவது பொருத்தமில்லை. உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பாக எம்முடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளாது தமிழரசுக் கட்சி ஒருதலைப்பட்சமாக விலகிக்கொண்டுள்ளது. ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் கோரியிருந்தபோதும், பங்காளிக் கட்சிகளுடன் பேசி முடிவை அறிவிப்போம் என்று கூறியிருந்த தமிழ்த்தேசியக் கூட்டணி இதுவரை எந்த முடிவையும் அறிவிக்கவில்லை- என்றார். (எ-66)

# வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சி



யாழ்ப்பாணம், மே 14

யாழ். மாவட்டத்தில் வாழைப்பழத்தின் விலை வீழ்ச்சியால் வாழைச்செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கதலி வாழைப்பழங்கள் அதிகளவில் சந்தைக்குக் கொண்டு வரப்படுவதால் அவற்றின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது. ஒரு கிலோ கதலிப்பழம் தற்போது 40 ரூபாவாக விற்பனைசெய்யப்படுகிறது. வாழைக் குலைகளின் விலை வீழ்ச்சியால் தமது வருமானம் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (ச- 25, 17)

# சுற்றுலாவிகளின் பஸ் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 14

தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகளின் பஸ் மீது யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

வேலணையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பஸ் பயணித்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் முந்திச் செல்ல இடம்தரவில்லை என்று பஸ் சாரதியுடன் முரண்பட்டதுடன், பஸ்ஸின் கண்ணாடிகளை உடைத்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பஸ்ஸில் பயணித்த இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-20)



# குஷ் போதையுடன் பிரிட்டன் பெண் கைது

கொழும்பு, மே 14

தாய்லாந்தின் பாங்காக்கிலிருந்து இலங்கைக்கு வந்த பிரிட்டிஷ் பெண் ஒருவரிடமிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட குஷ் போதைப் பொருளின் ஒரு தொகுதியை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருள்களின் மொத்த எடை 46 கிலோகிராம் என்றும், அதன்-மதிப்பு 460 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# ரயில் மோதி இளைஞன் சாவு

அநுராதபுரம், மெதகமப் பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கு பின்புறத்தில் உள்ள ரயில் கடவையில் ரயிலில் மோதி 22 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதியே இந்த இளைஞன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



# வவுனியாவில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

வவுனியா, மே 14

யாழ். பல்கலைக்கழக வவுனியா கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் ஆரம்பித்துவைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வவுனியா பிரதான தபால்நிலையத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது. தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை பரிமாறித் தமிழ்மக்கள் இனவழிப்புக்கு உள்ளான வரலாற்றினையும், வலிகளையும் இளைய தலைமுறையினருக்குக் கடத்தும் செயற்பாட்டை, குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ளனர். குறித்த நிகழ்வில் பொதுமக்கள் பலர் உணர்வுபூர்வமாக பங்கேற்று கஞ்சி அருந்தினர். (ச-110)

# புதினம் தெரியுமோ

**"மூதல் வாற அஞ்சு பொம்பிளையளுக்கு சாறி குடுப்பம்"**

**"முதல் வாற அஞ்சு ஆம்பிளையளுக்கு வேட்டி , சேர்ட் குடுப்பம்"**

**"வாற எல்லாருக்கும் கூல் ட்ரிங்ஸூம் குடுத்து, மத்தியானம் சிக்கன் புரியாணியும் குடுப்பம்"**

**இப்பிடி அது தாறம், இது தாறம் எண்டு எதுக்கு கூப்பிடுகினம் எண்டு நினைக்கிறியள்? புதிசா ஏதும் கடையள் திறந்தால்தான் இப்பிடி விளம்பரம் செய்வினம். ஆனால் இது ஒரு இரத்ததான நோட்டீஸில இருந்த விசயம் எண்டு சொன்னால் நம்புவீங்களோ. ஆனால் நம்பத்தான் வேணும். கிட்டடியில நிறுவனமொண்டு வைச்ச இரத்த தானத்துக்குத்தான் இப்பிடி சாறி தாறம், வேட்டி தாறம், புரியாணி தாறம் எண்டு சொல்லி ஆக்களைக் கூப்பிட்டிருக்கினம். ஆனால் அப்பிடிக் கூவியும் ஆக்கள் பெரிசாப்போகேலை எண்டது வேறகதை. அரசியல்வாதிமார் மாதிரி 'வேட்டி, சாறி, சாப்பாடு தாறம், வந்து இரத்ததானம் செய்யுங்கோ' எண்டு கூப்பிடுறதும் இரத்த தானத்துக்கு அழகில்லை. அப்பிடியிருந்தும் இப்ப சலுகையள், சாப்பாடு குடுத்தாலும்கூட எங்கட ஆக்கள் இரத்ததானம் செய்யப் போறது குறைஞ்சுகொண்டே வருகுது. ஏன் இப்பிடியொரு நிலைமை?**

**எல்லாம் இப்பத்தை இளசுகளின்ர வாழ்க்கை முறை மாற்றம்தான். முந்தி பச்சை குத்தினவையை ஊரில காண்றதே அரிது. இப்ப என்னடாவெண்டால் பச்சை குத்தாத ஆக்களைப் பாக்கிறதுதான் அரிதிலும் அரிதாக் கிடக்குது. அதிலையும் ஒரு பச்சை குத்திப்போட்டு அதோட நிப்பாட்டுறேலை. உடம்பில ஒரு இடம்கூட மிச்சம் வைக்காமல், அடிக்கொருக்கா பச்சை குத்திறதுதான் இப்ப லேட்டஸ்ட் 'பஷன்'. பச்சை குத்தியிருந்தால் குறிப்பிட்ட காலத்துக்கு இரத்தம் குடுக்கேலாது. அப்பிடி 'பச்சைத்தமிழர்களா' எங்கட பெடிபெட்டையள் மாறிக்கொண்டிருக்கிறதும் இரத்ததானத்துக்குப் போறவையின்ர தொகை குறையிறதுக்கு ஒரு முக்கியமான காரணம்.**

**அதைவிட இப்பிடி ஆக்களுக்கு உதவி செய்யிறது, இரத்தம் குடுக்கிறது எண்டதெல்லாம் வேலையில்லாத ஆக்களின்ர வேலை எண்ட மாதிரி இப்பத்தை இளசுகள் நினைக்க வெளிக்கிட்டிட்டினம். தாங்கள் என்னத்தை செய்து போட்டால் ரிக்ரொக்கில கனபேர் பாப்பினம்? புதிசா என்ன ரீல்ஸ் போடலாம்? எண்ட யோசினை மட்டும்தான் இளசுகளுக்கு இருக்கே தவிர, சேவை மனப்பாங்கு எல்லாம் துலைஞ்சு போய் கனகாலமாகிப் போட்டுது. ஆஸ்பத்திரியளிலையும் இரத்ததானம் செய்ய வாறவையின்ர தொகை சரியாக் குறைஞ்சு போட்டுதாம். போறபோக்கைப் பார்த்தால் இரத்தமும் வெளிநாடுகளில இருந்து இஞ்ச இறக்குமதி செய்யவேண்டிய நிலை வந்தாலும் அதிசயமில்லை பாருங்கோ.**

padsi@uthayan.com -பட்சி



# இன்றைய
(ராசிபலன்)

**மேடம்:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த தகவல் கிடைப்பது தாமதமாகும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உ றவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் குடும்பத்தில் சிறு சிறு சங்கடங்களும், வீண் செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மற்றவர்களுடன் பேசும்போது மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீட்டில் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்கு மேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளால் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம்செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் உறவினர்கள்வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும். சகோதரர்களுக்காக செலவுசெய்ய நேரிடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும்.

**மீனம்:** தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடமுடியும்.

# நுவரெலியா காயத்ரி பீடத்தில் மகா சித்தர்களுக்கான யாகம்



நுவரெலியா, மே 14

இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் ஆண்ட இடமாகவும் அவருடைய மகன் இந்திரஜித் தவம் புரிந்த இடமாகவும் கருதப்படுகின்ற நுவரெலியா காயத்ரி பீடத்தில், பீடத்தின் ஸ்தாபகர் சந்திரமோகன் சுவாமி தலைமையில் மகா சித்தர்களுக்கான யாகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

திருநாவுக்கரசர் ஆதீனக் குரு முதல்வர் தவத்திரு நரசிங்க நவநீத திருஞான ஜோதி அடிகளாரின் கரங்களினால் பல நூறு பக்தர்களுக்கு உருத்திராக்கம், மணிகள் அணிவித்து ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. (ச-25,125)



# வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 14

யாழ்.யூனியன் கல்லூரியின் முன்னாள் உடற்கல்வி ஆசிரியரும் வலைப்பந்தாட்டப் பயிற்றுவிப்பாளருமாகிய மறைந்த திருமதி. ஜெயந்தி ஜெயதரனின் ஞாபகார்த்தமாக யூனியன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய லெஜண்ட் லேடி ஜெயந்தி குயின் கோப்பை-2025 எனும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமையும், நேற்றுச் செவ்வாய்க்கிழமையும் யாழ். யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

சுற்றுப்போட்டியானது திறந்த பெண்கள், 35 வயதுக்கு மேற்பட்ட பெண்கள், கலப்பு ஆகிய பிரிவினருக்குரிய போட்டிகளாக நடைபெற்ற நிலையில் இதன் தொடர்ச்சியாக பாடசாலை மாணவர்களின் வயதுப்பிரிவினருக்கான போட்டிகள் எதிர்வரும் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ச-41-27)



நீர்வேலி கந்தசுவாமி ஆலய தீர்த்தத் திருவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ச-25, 17)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 14

பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் மாலை 7மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சிவநெறிப்பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ள நிகழ்வில் சைவப்புலவர்கள் கந்த. சத்தியதாசன், செ.த.குமரன், ச.முகுந்தன், பொன். சந்திரவேல், மற்றும் இளஞ்சைவப்புலவர்கள் ச.நவநீதன், க.கயிலைவாசன், த.மனோஜ்குமார் ஆகியோர்களின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)

★★★★★★

யாழ்ப்பாணம், மே 14

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முக மகா சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடற் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர்-5 நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு நடைபெறவுள்ளது. பரஞ்சோதி முனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் த.மனோஜ்குமாரின் 'திருமணப்படலம்' எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ச-41)

★★★★★★

யாழ்ப்பாணம், மே 14

தெல்லிப்பளை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர்-4 நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4.மணிக்கு நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையையடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க.கயிலைவாசனின் "தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப்படலம்" எனும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ச-41)

# காத்தவராயன் கூத்து



யாழ்ப்பாணம், மே 14

சித்திராப் பௌர்ணமியை சிறப்பிக்கும் முகமாக சண் நாடகக்குழு வழங்கிய ஈழத்தமிழர்களின் பாரம்பரிய கூத்து வடிவங்களில் ஒன்றான "காத்தவராயன் கூத்து" முழுநிலா அரங்கில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் காத்தவராயன் கூத்தினை ஓய்வு பெற்ற மதுவரித் திணைக்கள அதிகாரியும் நாடகச் செயற்பாட்டாளருமாகிய நா.கிருபாகரன் வடிவ உருவாக்கம் செய்திருந்தார். இதேவேளை சிறார்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-41-125)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

ஒரு மனிதனின் அறிவின் உச்ச அளவு,
அவனுக்கு எதுவும் தெரியாது என்பதை அறிவதுதான்

– ஜோசப் அடிசன் –

# விஸ்வரூபமெடுக்கும் போதை

போதைப்பொருள்களால் ஏற்படும் உயிரிழப்புகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திடீரென அதிகரித்திருக்கின்றன. கடந்த ஒருவாரத்தில் மட்டும் இவ்வாறான 5 உயிரிழப்புகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இந்தவிடயத்தைச் சாதாரணமாகக் கடந்துசென்றுவிடமுடியாது. போதைப்பழக்கத்தால் பெரும்பாலும் இளவயதினரே உயிரிழந்துள்ள நிலையில், போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதற்கு விரைவான - காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் அவசியம்.

ஒரு காலத்தில் போதைப்பொருள்கள் என்றால் என்னவென்றே தெரியாதிருந்த வடக்கு, இப்போது போதைப்பொருள் வர்த்தகத்தின் கேந்திரநிலையமாக மாறியிருக்கின்றது. இலங்கைக்குள் போதைப்பொருள்களைக் கொண்டுவருவதற்கான நுழைவாயிலாகக் கருதப்படும் அளவுக்கு வடக்கில் போதைப்பொருள் வர்த்தகமும், போதைப்பொருள் நுகர்வும் மிகையாகஅதிகரித்திருக்கின்றன. நாலாபக்கமும் இராணுவத்தினராலும், கடற்படையாலும் சூழப்பட்டுள்ள புலனாய்வாளர்களால் நிரப்பட்டுள்ள வடக்கில் போதைப்பொருளின் ஆதிக்கம் இந்தளவுக்கு வியாபித்திருப்பது பெரும் புதிராகவே இருக்கின்றது.வடக்கில் போதைப்பொருள் பாவனையை - போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவது - அந்த வலையமைப்பை இனங்காண்பது படைத்தரப்புக்கும் பொலிஸாருக்கும் புலனாய்வாளர்களுக்கும் சவாலான விடயம் அல்லவே. உண்மையைச் சொல்லப்போனால், வடக்கில் உள்ள போதைப்பொருள் வியாபாரிகளும் - போதைப்பொருள் வலையமைப்புகளும் பற்றிய தகவல்கள்யாவும் படைத்தரப்புக்கும் பொலிஸாருக்கும் புலனாய்வாளர்களுக்கும் தெரிந்தே இருக்கும். ஆனால் வடக்கில் இருந்து போதைப்பொருளை அகற்றவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லாததும், இந்த வலையமைப்புகளில் இருந்து கிடைக்கும் 'வரும்படிகளும்' வடக்கை இப்போது போதைப்பொருள் வர்த்தகத்தின் கேந்திரநிலையமாக மாற்றியிருக்கின்றது.

போதைப்பொருள் நுகர்வோரைக் கைது செய்வதால் போதைப்பொருளை நாட்டிலிருந்து ஒழிக்கமுடியாது. ஆனால் பொலிஸார் இப்போது அதைமட்டுமே செய்துகொண்டிருக்கின்றனர். போதைப்பொருளை நாட்டில் இருந்து முற்றாக ஒழிக்கவேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருக்கும் தற்போதைய அரசாங்கம் இந்த விடயத்தில் சீரிய கவனத்தை எடுக்கவேண்டும். போதைப்பொருள்வர்த்தகத்தில் ஈடுபடுவோரை-போதைப்பொருளை நாட்டுக்குள் கொண்டுவருவோரை சட்டத்தின் பிடியில் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். வடக்கில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் - அதனோடு தொடர்புபட்டிருக்கும் -தரப்புகளைக் கைதுசெய்வதற்குரிய அழுத்தங்களைப் பொலிஸாருக்கு அரசாங்கம் கொடுக்கவேண்டும். அவ்வாறு நடந்தால் மட்டுமே போதைப்பொருளைக் கட்டுப்படுத்துவதுடன், போதைப்பொருளால் ஏற்படும் இளவயது மரணங்களைத் தடுக்கமுடியும். எனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவேண்டும்.




# ஒரு மில்லியனை எட்டும் சுற்றுலாப்பயணிகள் வருகை

கொழும்பு, மே 14

**இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை வெகுவிரைவில் ஒரு மில்லியனை எட்டிப்பிடிக்கும் நிலையை நெருங்கியுள்ளது.**

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 9 இலட்சத்து 30 ஆயிரத்து 794 பேர் இலங்கைக்கு சுற்றுலாப்பயணிகளாக வருகை தந்துள்ளனர். ஐரோப்பாவில் குளிர் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளின் வருகையில் சற்று வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும் நாளொன்றுக்கு சுமார் ஐயாயிரம் பேரளவிலான சுற்றுலாப் பயணிகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு வருகைதந்துகொண்டிருக்கின்றனர் என்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ச-இ)



# வெப்பம் உயர்வு

கொழும்பு, மே 14

நாட்டின் பல பகுதிகளில் வெப்பநிலை அவதானம் செலுத்தவேண்டிய மட்டத்தில் இருக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை மற்றும் மொனராகலை மாவட்டங்களின் சில பகுதிகளில், மனித உடலால் உணரப்படும் வெப்பநிலை, அவதானம் செலுத்தவேண்டிய மட்டத்தில் இருக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வயோதிபத் தம்பதி மர்மக்கொலை!

கொழும்பு, மே 14

கம்பஹா கிரிந்திவெலப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னிமஹரப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் படுகொலைசெய்யப்பட்ட நிலையில் கணவரும், மனைவியும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கிரிந்திவெல, கன்னிமஹரப் பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயதுடைய கணவரும், 79 வயதுடைய மனைவியுமே இவ்வாறு மர்மமான முறையில் படுகொலைசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிரிந்திவெலப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

# நீதிபதி விமலராஜா காலமானார்



அவுஸ்திரேலியா, மே14

பிரபல சட்டத்தரணியும் ஓய்வுபெற்ற தொழில் நியாயசபை நீதிபதியுமான வேலாயுதம் விமலராஜா தனது 90 ஆவது வயதில் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை காலமானார். இவரது இறுதிச்சடங்கு நாளை வியாழக்கிழமை சிட்னி நகரில் நடைபெறவுள்ளது. வடமராட்சி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழையமாணவர்கள் சங்கத்தின் கொழும்புக் கிளையின் தலைவராக நீண்டகாலம் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச- 25)




# கொத்மலை பஸ் விபத்து விசாரிக்க பொலிஸ் குழு!

கொழும்பு, மே 14

நுவரெலியா - கம்பளை பிரதான வீதியின் கொத்மலை, கெரண்டி எல்லப் பகுதியில் இடம்பெற்ற விபத்துத் தொடர்பில் விசாரணை செய்ய முன்னாள் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தலைமையில் 5 பேர் கொண்ட பொலிஸ் குழுவைப்பிரதிப்பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளார்.

கதிர்காமத்திலிருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றே கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை விபத்துக்குள்ளானது.

இந்த நிலையில், விபத்துக்கான காரணங்களை ஆராயவும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கவும் நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் குழு முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ச-இ)



நாளை
வியாழக்கிழமை-வைகாசி 01
15.05.2025
சுபநேரம் : 07.23- 08.53
ராகுகாலம் : 01.23 - 02.53



# பாலியல் கொடுமைகளுக்கு கடும் தண்டனை தேவை

## யாழில் நேற்றுப் போராட்டம்

**யாழ்ப்பாணம், மே 14**

**புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்கொடுமைப் படுகொலையின் பத்தாவது ஆண்டை நினைவுகூர்ந்து அதற்கு எதிராகவும், தொடரும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராகவும் 'வல்லமை' சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.நகரில் அமைந்துள்ள பிரதான பேருந்துத் தரிப்பிட நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டது.**

இந்தப் போராட்டத்தில் வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தினர், இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி, தமிழ்மக்கள் கூட்டணி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் 'பணியிடங்களில் பாலியல் தொல்லைக்கு இடமில்லை!', 'சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்து!', 'தேசத்தின் விடுதலைக்கு எழும் குரல்கள் பாலியல் வன்கொடுமைகளுக்கு மௌனிப்பது ஏன்?', '1996 இல் யாழ்ப்பாணம் செம்மணியில் பாலியல் வன்கொடுமைக்குள்ளாகிய சிறுமிக்கான நீதி எங்கே?', '2013 இல் பண்டத்தரிப்பு, புத்தூர், வாதரவத்தை ஆகிய இடங்களில் பாலியல் வன்கொடுமைகளுக்குள்ளான பெண்களுக்கு நீதி கிடைத்ததா?', '2015 இல் புங்குடுதீவு, வேலணை, பரந்தன், கைதடி ஆகிய இடங்களில் பாலியல் வன்கொடுமைகளுக்குள்ளான சிறுமிகளுக்கான நீதி எங்கே'?, '2016 இல் வட்டுக்கோட்டை, வவுனியா, உடையார்கட்டு ஆகிய இடங்களில் பாலியல் வன்கொடுமைகளுக்குள்ளான சிறுமிகளுக்கான நீதி எங்கே?', '2021, 2022 இல் கொழும்பு, பண்டாரகம ஆகிய இடங்களில் பாலியல் வன்கொடுமைகளுக்குள்ளான சிறுமிகளுக்கானநீதிஎங்கே?' உள்ளிட்ட பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறும் கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் யாழ்.நகரிலிருந்து பேருந்தில் பயணித்து வேலணைச் சந்தியிலும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-66)



யாழ். போதனா மருத்துவமனையில் சர்வதேச தாதியர் தினம் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக்கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. (ச-25,66)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான நேற்று கிளிநொச்சி பஸ் தரிப்பு நிலையத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ச-27)




# நீர்வைக் கந்தனின் தேர்த் தரிப்பிடம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 14

நீர்வேலிக் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த் தரிப்பிடம் சுமார் 80 இலட்சம் ரூபா செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதியைச் சேர்ந்தவரும் புலம்பெயர் நாட்டில் வசிப்பவருமான க.முருகதாஸ் என்பவரின் நிதியுதவியுடன் இந்தப் புனரமைப்புப் பணி இடம்பெற்றது. (ச-25, 17)



# குடியிருப்பின் நடுவே மணற்கொள்ளை!

## செம்பியன்பற்றில் அடாத்து; மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 14

யாழ். வடமராட்சிக் கிழக்கு செம்பியன்பற்று வடக்குப் பகுதியில் மணற் கடத்தல் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

செம்பியன்பற்றுப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் நடுவில் மணற்கொள்ளை இடம்பெற்றுவருகின்றது. முன்னர் மணல் திட்டியாக இருக்கும் பகுதிகளிலிருந்து மணல் எடுத்துச்செல்லப்பட்டது. தற்போது கிராமப் பகுதியில் அதிகமாக கட்டடங்கள் அமைப்பதனால் மணல் அனுமதி கொடுக்கப்படாத நிலையில் மக்கள் குடியிருப்புகளில் நடுவில் மணற் கடத்தல் இடம்பெற்றுவருகின்றது.

இதனால் இந்தக் கிராமப் பகுதிகளில் பெருங்குழிகள் ஏற்பட்டு மழைகாலத்தில் உயிர்ச் சேதங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-27)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 14

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் சிங்களப் பேரினவாத அரசாங்கத்தால் இனப்படுகொலைசெய்யப்பட்ட தமிழ் உறவுகளை நினைவேந்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதான பேருந்து வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-66)



கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ச-41-113)

# வரி அதிகரிப்பை இடைநிறுத்த அமெரிக்கா - சீனா இணக்கம்



நியூயோர்க், மே 14

அமெரிக்காவும் சீனாவும் இறக்குமதிப் பொருள்களுக்கான வரியைத் தற்காலிகமாகக் குறைப்பதற்கு இணங்கியுள்ளன. இரு நாடுகளும் 90 நாள்களுக்கு பரஸ்பரக் கட்டணங்களை 115 சதவீதம் குறைக்கும் என அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஸ்கொட் பெசென்ட் தெரிவித்துள்ளார்.

சுவிட்ஸர்லாந்தில் சீனா மற்றும் அமெரிக்கா இடையே நடைபெற்ற வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் சீன பொருள்களுக்கு அதிக வரிகளை விதித்த பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற முதல் சந்திப்பு இதுவாகும்.

சீன இறக்குமதிகள்மீது ட்ரம்ப் 145 சதவீத வரி விதித்திருந்தார். அதை யடுத்துச் சில அமெரிக்கப் பொருள்களுக்கு 125 சதவீத வரியை சீனா விதித்தது. இது நிதிச்சந்தைகளில் கொந்தளிப்பை ஏற்படுத்தியதுடன், உலகளாவிய பொருளாதார மந்த நிலை தொடர்பாக அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

தற்போது எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டின்படி, சீன இறக்குமதிகள் மீதான அமெரிக்க வரிகள் எதிர்வரும் 90 நாள்களுக்கு 30 சதவீதமாகவும், அதேவேளையில் அமெரிக்க இறக்குமதிகள் மீதான சீன வரிகள் 10 சதவீதமாகவும் குறைக்கப்படவுள்ளன. (ஏ-இ)

# ஆஸி. விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு

மெல்போர்ன், மே 14

அவுஸ்திரேலியாவில் நடந்த வீதி விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டாஸ்மேனியாவில் உள்ள நெடுஞ்சாலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் 28 வயதான தாரக விஜேதுங்க என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர் கடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக இரத்தினபுரி மாவட்டத்தில் வேட்பாளராகப் போட்டியிட்டவர் என்று தெரியவருகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியின் 4ஆவது வேட்பாளராகப் போட்டியிட்ட இவர், 21 ஆயிரத்து 200 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (ஏ-இ)

# மருந்துகளின் விலையைக் குறைக்க ட்ரம்ப் தீர்மானம்

அமெரிக்காவின் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் சாதாரண மருந்துகளின் விலைகள் உடனடியாக 30 வீதம் முதல் 80 வீதம் வரை குறைக்கப்படும் என அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில், நமது நாட்டின் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிர்வாக உத்தரவுகளில் ஒன்றில் நான் கையெழுத்திடுவேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். உலகில் எங்கும் மருந்துகளுக்கு மிகக் குறைந்த விலையைச் செலுத்தும் நாடுகளைப் போலவே அமெரிக்காவும் அதே விலையைச் செலுத்தும் ஒரு மிகவும் விரும்பப்படும் நாடாக மாறும் வகையிலான கொள்கை ஒன்றை நான் நிறுவுவேன்.

நமது குடிமக்களின் சுகாதாரச் செலவுகள் நினைத்துப் பார்க்காத எண்ணிக்கையில் குறைக்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்கா டிரில்லியன் கணக்கான டொலரைச் சேமிக்கும்என்று டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ஏ-இ)



# சதுரங்கத்துக்கு ஆப்கன் தடை!

காபூல், மே 14

ஆப்கானிஸ்தானில் சதுரங்க விளையாட்டுக்கு தலிபான் அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

"இந்த விளையாட்டு இஸ்லாமிய கொள்கைகளுடன் ஒத்துப்போகிறதா என்பதை மத அதிகாரிகள் பரிசீலிக்கும் வரை தடை நடைமுறையில் இருக்கும்" எனத் தலிபான் விளையாட்டுத்துறையின் செய்தித் தொடர்பாளர் அடல் மஷ்வானி தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் சதுரங்க விளையாட்டு அண்மையில்தான் பிரபலமானது . வேலைவாய்ப்பு இல்லாமை, பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கும் சரிவு, பொழுது போக்கு மையங்கள் மற்றும் குறிப்பிட்ட சில விளையாட்டுகளுக்கு அரசு தடை விதித்திருப்பது இளைஞர்களை சதுரங்கத்தை நோக்கி திருப்பியிருக்கிறது.

இந்தத் விளையாட்டு வணிகமாக்கப்பட்டிருப்பதால் இந்த தடை உத்தரவு வணிக ரீதியான பாதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. (ஏ-இ)

# ஆக்கிரமிப்புக்கு எதிராக மிக வலுவான பதிலடி

## இந்தியப் பிரதமர் வலியுறுத்து

புதுடில்லி, மே 14

எந்தவொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கும் எதிராக வலுவான பதிலடி வழங்கப்படவேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியா - பாகிஸ்தான் போர் நிறுத்தத்துக்குப் பின்னர், பாதுகாப்பு நிலைமையை மீளாய்வு செய்வதற்கான பாதுகாப்புக்கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாதுகாப்புப் படைத் தலைவர், ஜெனரல் அனில் சவுகான் மற்றும் முப்படைத் தலைவர்கள் கலந்துகொண்டனர். பாகிஸ்தானின் எந்த வொரு தாக்குதலுக்கும் கடுமையான பதிலடி கொடுக்கப்படவேண்டும் என்று பிரதமர் மோடி முப்படைத் தலைவர்களிடம் கூறினார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஏ-இ)





# போர் நிறுத்தத்துக்கு பாப்பரசர் வரவேற்பு

வத்திக்கான், மே 14

இந்தியா, பாகிஸ்தான் இடையே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்தத்துக்கு பாப்பரசர் லியோ வரவேற்புத் தெரிவித்துள்ளார்.

புதிதாகப் பாப்பரசராகப் பொறுப்பேற்றுள்ள 14ஆம் லியோ, பொதுமக்கள் முன் உரையாற்றியுள்ளார். உக்ரைன் மற்றும் காஸாவில் அமைதி ஏற்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர், உடனடி போர் நிறுத்தம் ஏற்படவேண்டும், பணய கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் மற்றும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். பாப்பரசர் பிரான்சிஸ் கூறிய விடயங்களை எதிரொலிக்கும் வகையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதற்கும் பாப்பரசர் லியோ வரவேற்பு தெரிவித்து உள்ளார். (ஏ-இ)



# அமெரிக்க வரி நடைமுறையானால் ஒரு மில். பெண்கள் வேலையிழப்பு!

**கொழும்பு, மே 14**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த 44 சதவீத வரி நடைமுறைக்கு வந்தால், முக்கிய ஏற்றுமதித் துறைகளில் பணிபுரியும் சுமார் ஒரு மில்லியன் இலங்கைப் பெண்கள் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் இழப்பார்கள் என்று ஆசியா நியூஸ் தெரிவித்துள்ளது.**

அமெரிக்க சந்தை மிகவும் இலாப கரமான சந்தைகளில் ஒன்றாக இருப்பதால், பெரும்பாலும் பெண களைப் பணியமர்த்தும் இலங்கை யின் முக்கிய ஏற்றுமதித் தொழில் களான ஆடை, தேயிலை, இரத்தி னக் கற்கள், இறப்பர் மற்றும் இல வங்கப்பட்டை ஆகியவை புதிய வரிகளால் அதிகம் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இலங்கையின் மொத்த ஏற்று மதியில் சுமார் 40 சதவீதத்தை ஆடைத்தொழில் கொண்டுள் ளது. இந்தத் தொழிற்றுறையில் முக்கியமாக கிராமப்புறங்களில் குறைந்த வருமானம் கொண்ட பின்னணியைச் சேர்ந்த பெண் களே அதிகம் பணிக்கமர்த்தப்படு கின்றனர். அமெரிக்காவின் புதிய வரி நடைமுறைக்குவந்தால் அந் தப் பெண்கள் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் ஊதியம் கணிசமாகக் குறையும் என்று தெரிவிக்கப்படு கின்றது. (எ-இ)

## வேகமான பொருளாதார வளர்ச்சி பட்டியலுக்குள் இலங்கை இல்லை

கொழும்பு, மே 14

2025ஆம் ஆண்டில் ஆசியக் கண்டத்தில் கூடுதலான பொருளாதார வளர்ச்சியை அடையக்கூடிய நாடுகளின் எதிர்வுகூறல் பட்டியலை சர்வதேச நாணயநிதியத்தின் ஆசியப் பிராந்திய அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அதில் இந்தியா 6.2 புள்ளி பொருளாதார வளர்ச்சி வேகத்துடன் முதலாம் இடத்திலும், 5.5 புள்ளி வளர்ச்சி வேகத்துடன் பிலிப் பைன்ஸ் இரண்டாம் இடத்திலும், 5.2 புள்ளி வளர்ச்சி வேகத்துடன் வியட்நாம் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

முன்னைய காலங்களில் ஆசியாவின் பொருளாதார ஜாம்பவான்களாகக் கருதப்பட்ட ஜப்பான், கொரியா, ஹொங்கொங், சிங்கப்பூர் என்பன சற்றுப் பின்ன டைந்த பொருளாதார வளர்ச்சியையே அடையும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆசியக் கண்டத்தின் பத்து நாடுகள் மற்றும் அவுஸ்தி ரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றை உள்ளடக்கி வெளியிடப்பட்டுள்ள குறித்த எதிர்வுகூறல் பட்டியலில் இலங்கை உள்ளடக்கப்படவில்லை. (எ-இ)

## கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி நேற்று நியமனம்!

ஒட்டாவா, மே 14

கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்த சங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். கனடாவில் அண்மை யில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. இதில் லிபரல் கட்சி வெற்றிபெற்று ஆட்சியமைப்பதை உறுதிசெய்துள்ள நிலை யில், அமைச்சரவை நியமனங்கள் நேற்று வழங்கப்பட்டன. இதன்போதே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்த சங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## தந்தையைத் தேடும் பிள்ளைகள்



வவுனியா, மே14

வவுனியாவில் காணா மற்போயுள்ள தமது தந் தையை 50 நாள் களாகத் தேடிவரும் பிள்ளைகள், அவரைக் கண்டால் தகவல் வழங்குமாறு கோரியுள்ள னர்.

மன்னார் பனங்கட்டுக் கொட்டு மேற்கு பகு தியைச் சேர்ந்த முருகேசு சசிக்குமார் என்ற 51 வயதான குடும்பஸ்தர் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் திகதி வவுனியாவுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றிருந்தநிலையில் காணாமற் போயுள்ளார். இது தொடர்பில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டிருந்தபோதும், இதுவரை அவரைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.

இவர் தொடர்பாக தகவல் தெரிந்தவர்கள் 0743022280 அல்லது 0758320499 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-110)

## மரண அறிவித்தல்

பிறப்பு
14 . 02 . 1942



இறப்பு
13 . 05 . 2025

### அமரர் அருளம்பலம் கந்தவேள் (வேலணை)

(கவிதாஸ் ஸ்ரோர்ஸ் வவுனியா உரிமையாளர்)

யாழ் வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் கந்தவேள் அவர்கள் நேற்று (13.05.2025) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னம்பலம்-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் யோகம்மாவின் பாசமிகு கணவரும் கவிதா (நரம்பியல் நிபுணர்-யாழ் போதனா வைத்தியசாலை), கவிதாசன் (பொறியியலாளர்-Uk), யசோதா (வைத்தியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இளங்குமரபாகு-பொது வைத்திய நிபுணர்-யாழ் போதனா வைத்தியசாலை), சுபாயினி (குழந்தை மருத்துவ நிபுணர்-Uk), றமேஸ் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காவியா, சிவேஸ், வருண், சேயோன் ஆகியோரின் பாசமிகு பேரனும் திருவருட்செல்வி, தணிகாசலம், செந்தமிழ்ச்செல்வி, செல்வரட்ணம், ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராசகோபால், அருந்தவச்செல்வி, சந்திசாதேவி, ஸ்ரீகுசன், இராணியம்மா, அரசரட்ணம், சிற்றம்பலம், மகாலிங்கம், கோணேசலிங்கம், இந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் நாளை (15.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
071 866 7715
077 221 3718

## சனசமூக நிலைய, உபதபால் அலுவலக திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 14

கலைவாணி சனசமூக நிலையம் மற்றும் குப்பிழான் உப தபால் அலுவலகம் ஆகியவற்றின் திறப்பு விழா குப்பிழான் தெற்கில் (குப்பி ழான் விவசாய சம்மேளனம் அரு கில்) இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆசிரியர் க. கமலதாஸ் தலைமை யில் இடம்பெறவுள்ள நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.சித் தார்த்தன், யாழ். பிரதி அஞ்சல் மா அதிபர் திருமதி மதுமதி வசந்தகு மார், யாழ். பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஏ.டி பெர் னாண்டோ, உடுவில் பிரதேச செயலாளர் பா. ஜெயகரன், வலி காமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் அ. பிரதீபன், சுன்னா கம் தபாலதிபர் திருமதி கவிதா சிவ குமாரன், வலி. தெற்குப் பிரதேச சபையின் சனசமூக நிலைய அபி விருத்தி உத்தியோகத்தர் திருமதி சர்மிளா மயூரன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீ பன், குப்பிழான் தெற்கு கிராம அலுவலர் சு. பிரதீபா, குப்பிழான் வடக்கு கிராம அலுவலர் இ. ரமேஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் என்று அறி விக்கப்பட்டுள்ளது. (எ-25)

## குமுதினி படுகொலைகள் நினைவேந்தல் நாளை!

யாழ்ப்பாணம், மே 14

குமுதினி படுகொலையின் 40ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வியாழக்கி ழமை நெடுந்தீவில் உணர்வுபூர்வமாக முன் னெடுக்கப்படவுள்ளது.

நாளை காலை 8 மணியளவில் மாவிலித் துறை வீரபத்திரப்பிள்ளையார் ஆலயம், மாவிலித்துறை சவேரியார் ஆலயம், மற்றும் தேவசபை ஆலயம் என்பவற்றில் படு கொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மா சாந்திக்கான வழிபாடுகள் சம நேரத்தில் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு மாவிலித்துறைமுகப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டோர் நினைவாக அமைக்கப்பட் டுள்ள நினைவுத் தூபி வளாகத்தில் நினை வேந்தல் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

1985ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி காலைபலகனவுகளுடன்நெடுந்தீவில்இருந்து குறிகாட்டுவான் நோக்கிச் குமுதினி படகில் பயணித்த தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-125)

> உங்கள் கண்களை மூடிக்கொள்வதால் எதுவும் மாறப்போவதில்லை.
>
> - ஹருகி முரகாமி

# மலையக மண்ணின் மாற்றம்



## - மற்றுமொரு பக்கம்

■ ச. அஷ்விதா
ஊடகக் கலைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மலையகம் என்ற சொல்லைக் கேட்கும்போது, நம்மில் சிலருக்கு அழகான இயற்கைக் காட்சிகளும், பச்சை பசேலெனக் காட்சிதரும் தேயிலைத் தோட்டங்களும், நீர்வீழ்ச்சிகளும், மலைகளும் நினைவுக்குவரும். ஆனால், பலருக்கு "மலையகத்தார்" என்றவுடன், இந்தியாவிலிருந்து தேங்காய்க்கும் மாசிக்கும் ஆசைப்பட்டு இலங்கைக்கு வந்த அடிமைகள் என்றும், வறுமையோடு லயனறைகளில் வாழும் பின்தங்கிய சமூகம் என்றும் எண்ணம் தோன்றும்.

அத்தகைய ஒரு மலையகச் சமூகம் இருந்தது என்பது உண்மைதான். ஆனால், 200 ஆண்டுகள் கழிந்த பிறகு, இந்தச் சமூகத்தின் மாற்றம் பல்வேறு மைல்கற்களைக் கடந்து புதிய பக்கங்களாக அமைந்துள்ளது. இந்த மாற்றத்தை அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே நன்றாக உணரமுடிகிறது. மலையகச் சமூகத்தினர் என்பவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாகவும், வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழ்பவர்களாகவும் சித்தரிக்கப்பட்ட காட்சிகள் அனைவரின் மனதிலும் ஆழமாகப் பதிந்து, அதுவே அவர்களின் வாழ்வாக மாறிவிட்டது. எனவேதான், இன்று மலையகச் சமூகத்தின் மாற்றங்கள் எவரது கண்ணுக்கும் தெரியாமல் மறைந்து விட்டன.

மலையகத்தில், நமக்கு முன்னைய தலைமுறையினர் தேயிலைக் கொழுந்தைப் பறித்துக் கூலித்தொழில் செய்து தங்கள் பசியைப் போக்கிக்கொண்டனர். ஆனால், அந்தத் தலைமுறையில் எவரும் தங்கள் அடுத்த தலைமுறையை அந்த நிலைக்கு உட்படுத்த விரும்பவில்லை. அதற்காக, மலையகச் சமூகம் 'கல்வி' என்ற கருவியைத் தங்கள் ஆயுதமாகப் பயன்படுத்திக்கொண்டது. இதைப் பறைசாற்றும் வகையிலேயே, இப்போது வெளியாகும் கல்விப் பொதுத்தராதர, உயர்தரப் பரீட்சை முடிவுகள், மலையகச் சமூகத்தின் அடையாளமாக மாறியுள்ளன. மலையகத்திலுள்ள பல்வேறு பாடசாலைகளில், தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, சமூகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். ஹட்டன் கல்வி வலயத்தைச் சேர்ந்த பிரசித்திபெற்ற சென்மேரிஸ் மத்திய கல்லூரியில், இம்முறை 27 மாணவர்கள் சிறந்த முடிவுகளோடு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 21 பேர் கலைப்பிரிவிலும், இருவர் வர்த்தகப் பிரிவிலும், இருவர் பொறியியலிலும், இருவர் மருத்துவத்திலும் சித்திபெற்றுள்ளனர். இவர்களில் ச. அக்சரநாத் என்ற மாணவன் கலைப்பிரிவில் மூன்று 'A' தரங்களுடன் மாவட்ட ரீதியாக ஆறாம் இடத்தைப் பிடித்திருக்கிறான். இவன் ஒரு தோட்டத் தொழிலாளியின் மகன் என்பதில் மலையகச் சமூகம் பெருமை கொள்கிறது. மேலும், ஹட்டன் கல்வி வலயத்தைச் சேர்ந்த நோர்வுட் தமிழ் மகாவித்தியாலயத்தில் 16 மாணவர்கள் கலைப் பிரிவில் சிறந்த முடிவுகளோடு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். இவ்வாறு, ஒவ்வோர் ஆண்டும் மலையகச் சமூகத்தின் தோட்டத் தொழிலாளர்களின் செல்வங்கள், வரலாற்றுச் சுவடுகளைப் பதித்துக்கொண்டிருக்கின்றனர்.

**மலையகத்தின் இயற்கை அழகு மட்டுமே பலரால் விரும்பப்படுகிறது. ஆனால், மலையக மக்கள் மீதான எண்ணப்பாடு இன்னும் வாழும் அடிமைச் சமூகம் என்றே உள்ளது. மலையகச் சமூகம் ஒரு பின்தங்கிய சமூகம் என்ற எண்ணங்களே, இவர்களின் மாற்றத்தின் பல பக்கங்களைப் பலருக்கு அறியவிடாமல் செய்கின்றன.**

இன்று மலையகச் சமூகத்தில் கல்வியில் பாரிய மாற்றத்தை நாம் காணமுடிகிறது. இந்த மாற்றம், நமது முன்னைய தலைமுறையினரின் கடின உழைப்பின் விளைவாகக் கிடைத்தது என்பதை நாம் உணரவேண்டும். மலையகச் சமூகத்தில் இன்று பார்க்கும்போது, "வீட்டுக்கு ஒரு ஆசிரியர், வைத்தியர், சட்டத்தரணி" என ஆயிரக்கணக்கான பட்டதாரிகளைக் காணலாம். இவர்கள் போற்றத்தக்கவர்கள். இவ்வாறு உயர்ந்தவர்கள் அனைவரும், தேயிலைத் தாயிடமிருந்து பெற்ற வருமானத்தால் வளர்ந்தவர்கள் என்பதை ஒருபோதும் மறப்பதில்லை. அதேநேரம், தாம் மலையகச் சமூகத்தின் ஒரு பிரதிநிதி என்பதை வெளிப்படுத்துவதில் எந்தத் தயக்கமும் காட்டுவதில்லை.

மலையகத்தின் இயற்கை அழகு மட்டுமே பலரால் விரும்பப்படுகிறது. ஆனால், மலையக மக்கள் மீதான எண்ணப்பாடு இன்னும் "வறுமையில் வாழும் அடிமைச் சமூகம்" என்றே உள்ளது. மலையகச் சமூகம் ஒரு பின்தங்கிய சமூகம் என்ற எண்ணங்களே, இவர்களின் மாற்றத்தின் பல பக்கங்களைப் பலருக்கு அறியவிடாமல் செய்கின்றன. இங்கிருந்து வெளிப்படும் சாதனைகள் அனைத்தும் பேசப்படாமல் மறைந்துபோகின்றன.

200 ஆண்டுகளைக் கடந்த மலையகச் சமூகம், மாற்றத்தின் ஒரு பக்கமாகக் கல்வியைத் தேர்ந்தெடுத்து, அதைப் பல்வேறு வடிவங்களில் செதுக்கிக்கொண்டிருக்கிறது. கல்வி என்ற ஒரே ஆயுதத்தின் மூலம், லயனறைகளும், வறுமையும், அடிமைத்தனமும் மாற்றப்பட்டு, "இந்திய வம்சாவளித் தமிழர்" என்ற அடையாளத்திலிருந்து "மலையகத் தமிழர்" எனும் தனித்துவமான அடையாளம் உருவாகியுள்ளது. எனவே, மலையக மண்ணிலிருந்து உருவாகும் ஒவ்வொரு பட்ட தாரியும், தங்கள் சமூகத்தின் பொருளாதாரம், சமூக நிலை ஆகியவற்றை முன்னர் இருந்ததை விடவும் உயர்த்தியிருக்கிறார்கள்.

"எப்படியாவது நம் அடுத்த தலைமுறையினர் தலைநிமிர்ந்து நிற்கும் நிலையில் இருக்கவேண்டும்" என்ற கனவும் கவலையுமே, இன்று மலையகச் சமூகத்தின் தோட்டத் தொழிலாளர்களைத் தேயிலைச் செடிகளுடன் போராட வைக்கிறது. இந்த மகத்தான போராட்டம், ஒவ்வோர் ஆண்டும் பல்கலைக்கழகத் தேர்வுகளின் வாயிலாக வெற்றியாக மாறிக்கொண்டிருக்கிறது. இன்றும் சாதிக்கத் துடிக்கும் எத்தனையோ மாணவர்களுக்கு எண்ணற்ற தேவைகள் உள்ளன. எனவே, மலையக மக்களின் வாக்குகளைப் பெறும் அரசியல்வாதிகள், போலி நம்பிக்கைகளை வழங்குவதை நிறுத்தி, கல்வித் தேவைகளை நிறைவேற்றினால், இந்தச் சமூகம் இன்னும் விரைவாக வளரும் என்பதில் ஐயமில்லை.

"மாற்றம் ஒன்றே மாறாதது."

# தொற்றா நோய்களிலிருந்து மீளுவோம்




■ **தி.சாந்தகுமார்**
*யாழ்.வட்டு மத்திய கல்லூரி*

இன்றைய உலகில் அதிகம் பேசப்படும் பொருள்களில் ஒன்றாக 'தொற்றா நோய்' எனும் பதம் அமைந்துவிட்டது. பெறுமதிமிக்க மனித உயிர்கள் பலவற்றைக் காவுவாங்கும் சக்தியாக தொற்றாநோய்கள் மாறிவிட்டன. ஒருவரிடம் இருந்து மற்றவருக்குப் பரவாத நோய்களே தொற்றா நோய்கள் எனப்படும். இந்த நோய்களில் பெரும்பாலானவை ஊட்டச்சத்துக் குறைபாடுகளால் ஏற்படுகின்றன. அவை ஒருபோதும் கிருமிகள் அல்லது உடலைப் பாதிக்கும் பிற உயிரினங்களால் ஏற்படுவதில்லை. தற்காலத்தில் தொற்றாநோய்களான இதய நோய், நீரிழிவு, குருதியமுக்கம், புற்றுநோய் மற்றும் சுவாசநோய் போன்றன சடுதியாக அதிகரித்துவருகின்றன.

உலக சனத்தொகையில் 33 வீதத்துக்கும் அதிகமானவர்கள் தொற்றாநோய்களுக்கு ஆளாகியுள்ளதுடன் உலகில் ஏற்படும் மரணங்களில் 63 வீதமானவை தொற்றாநோய்கள் காரணமாகவே ஏற்படுவதாக அதிர்ச்சியையும் அச்சத்தையும் உண்டுபண்ணும் விடயத்தை உலக சுகாதார தாபனம் தெரிவிக்கின்றது. வாழ்க்கையில் எளிய மாற்றங்களை ஏற்படுத்துவதன்மூலம் அநியாயமான உயிரிழப்புகளைத் தவிர்த்துக்கொள்ளமுடியும். ஆரோக்கியமான உணவுப் பழக்கம், உடற்பயிற்சி, புகைத்தலை நிறுத்தல், மதுப்பாவனையை நிறுத்தல் போன்றவற்றின் ஊடாகத் தொற்றாநோய்களைக் கட்டுப்பாட்டுக்குள் நிலைநிறுத்தமுடியும்.

ஒரு நாளில் இரவும் பகலும் எவ்வாறு பிரிக்கமுடியாது மாறிமாறி வருகிறதோ அவ்வாறே ஒவ்வொரு மனிதனின் வாழ்நாளிலும் நோயுறுகின்ற நிலையும் அதிலிருந்து மீளுகின்ற நிலையும் மாறிமாறி நிகழ்கின்றது. இருந்தபோதிலும் அனேகமாக நோய்களின் பிடிக்குள் சிக்கிக்கொள்ளாமல் தற்போது காத்துக் கொள்கின்ற அல்லது பாதுகாக்கப்படுகின்ற உத்திகளும் ஒவ்வொரு மனிதனதும் வாழ்க்கை வட்டத்தின் மாற்றுப்பாதைகளாக இருக்கின்றன. இந்த மாற்றுப்பாதையில் பயணிக்கக் கற்றுக்கொண்டவர்கள் தங்கள் வாழ்க்கை வட்டத்தின் அதிகமான தூரத்தையும் அனேகமான நேரத்தையும் வாழ்க்கை வண்டியின் இன்பமான இருக்கையில் இருந்தே பயணிக்கிறார்கள்.

உயிர்கள் மற்றும் வாழ்வாதார இழப்பு ஆகியவற்றுடன் இணைந்த பொருளாதாரத் தாக்கம் என்பன தொற்றாநோய்களால் ஏற்படுவதனால் சுகாதார தாக்கத்தை உருவாக்குகின்றன. எவ்வகையில் நோக்கினும் இந்த நோய்களைக் கட்டுப்படுத்தி எம்மைப் பாதுகாக்கவேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்தும் வழிகள் தெரிந்தும் நாம் அவற்றைத் தவிர்த்து நடப்பது மிக மோசமான விளைவுகளை உண்டுபண்ணும்.

துரித உணவுகள் அதிகரித்துவிட்ட இன்றைய சூழலினால் உண்டாகும் தீய விளைவுகளில் தொற்றாநோய் முதன்மையானது. எம் முன்னோர்களின் இயற்கையோடு இணைந்த உணவு முறைமை எம்மை இந்நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும். மேலும் உடற்பயிற்சி எனும் மார்க்கம் தொற்றாநோயின் மரணத்திலிருந்து எம்மை விலகவைக்கும். சாதாரண தூரங்களுக்கான பயணங்களை நடந்தே மேற்கொள்ளல் மூலமும் இவற்றைச் சாத்தியமாக்க முடியும். இவற்றைவிட எம் மத்தியில் வெறியாட்டம் ஆடும் புகை, மது, எனும் அரக்கர்களை அண்டவிடாமல் பார்ப்பது தொற்றாநோய்களில் எம்மைப் பாதுகாக்கும் மிக முக்கிய வழியாகும்.

இந்தப் பாவனை அதிகரிக்க அதிகரிக்க ஆயுள் ரேகையின் அளவு தேய்ந்து கொண்டே செல்லும். எனவே தொற்றாநோயிலிருந்து பாதுகாப்பது என்பது தனிமனித நலன் சார்ந்தது அல்ல. அது குடும்ப நலனாக மாறி சமூக நலனாக உருப்பெற்று உலக நலனாக பெருவடிவம் எடுத்து நிற்கிறது. மாறாகத் தொற்றாநோய் எனும் அசுரனை உலவவிட்டு வேடிக்கை பார்ப்போமானால் குறித்த சில காலங்களில் பூமிப்பந்தில் மரணங்கள் மலிந்து மாண்டுபோகும் நிலையை எவராலும் தடுக்கமுடியாமல் போய்விடும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.




புதன்பொய்கைக்கு
நீங்களும் எழுதலாம்
- கட்டுரைகள்
- கவிதைகள்
- விமர்சனங்கள்
- நூல் அறிமுகம்
- பதிவுகள்
- அறிவியல்
- கலைப்படைப்புகள்

அனுப்பவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## தன்னலமில்லா தனிப்பெரும் அன்பு



தனக்கென வாழா தாராள நெஞ்சு
தயவுடையதோர் பண்பும் ஒருமித்துக்கொண்டு
தன்னுயிரின் பாதியை அணுவெனத் தந்து
அன்பின் வடிவாய் அகிலத்தில் என்றும்
அயராது வாழ்வது அன்னையவள்தானே

கருவறையில் தொடங்கி களங்கமில்லா அன்பை
கண்ணும் கருத்துமாய் கனிவோடு காட்டி
பாலூட்டி சீராட்டி பக்குவமாய் சோறூட்டி
பள்ளி பயிலும் காலமெல்லாம் வழியனுப்பி
பல்கலை செல்லும் காலம் தனிலும்
பலன் கருதா பணிவிடைகள் தானும்
பணிவோடு புரிந்தீராம் விருப்புடனே நாளும்

கேட்ட வரமே கொடுத்திடுவான் இறைவனவன்
கேளாமல் அனைத்தும் கொடுக்கும் அன்னையுனை
அன்போடு என்றென்றும் ஆராதித்து
அனுதினம் அனுஷ்டிப்போம் அன்னையர் தினமே

துவர்னிகா பாலகிருஷ்ணன்

# யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி அறிவுச்சோலைக்கு வெள்ளிவிழா

கலாநிதி பா.தனபாலன்
முதலாவது உபபீடாதிபதி
யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி




ஆசிரியர்களுக்கு வழங்கும் தொழிற் பயிற்சி தரமானதாக இருக்கவேண்டும் என்பதற்கமைய இலங்கையில் 1986ஆம் ஆண்டு 30ஆம் இலக்க கல்வியியற் கல்லூரியின் சட்டம் மூலம் கல்வியியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. அந்தவகையில் யாழ்ப்பாணம் கோப்பாய் புனித மண்ணிலே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2000ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி உருவாக்கப்பட்டது. கடுமையான யுத்தகாலத்தில் பல வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியில் இந்தக் கல்லூரி உருவானது.

இதற்குத் தன் முயற்சியால் அர்ப்பண சேவையாற்றியவர் முதற் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாகன் ஆவார். கல்லூரியின் தொடக்கம், நகர்வு, விரிவு, விளைவு என்ற வகையில் தன் தலைமைத்துவத்தை சிறப்பாக மனிதவளம் சார்பாகப் பிரயோகித்து வெற்றிகண்டார். நிதி மற்றும் பௌதீக வளங்களுடன் ஒப்பிடுகையில் மனிதவளம் மிகவும் உயர்வானது, முக்கியமானது.

இந்த மனிதவளத்தை கல்வியாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவ ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், சமூகத்தை முதலாவது பீடாதிபதி கலாநிதி.தி.கமலநாதன் சிறப்பாக பயன்படுத்தினார். அதற்கு சிரேஸ்ட ஆலோசனைச்சபை உறுப்பினர், மருத்துவக் கலாநிதி மருத்துவர் வை.தியாகராஜா துணையாக இருந்து அர்ப்பண சேவையாற்றினார். இன்றும் சேவை ஆற்றி வருகின்றார்.

## நிலக்கொடை

கல்வியமைச்சு கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஒரு பகுதியில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியை ஆரம்பித்தது. அதன் புதிய கட்டடத்திற்கான பதினைந்து ஏக்கர் காணியை கோப்பாயில் நன்கொடையாய் தனது தந்தையார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.தர்மலிங்கத்தின் பெயரில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் வழங்கினார். இந்த நிலக்கொடை மிகமிக உயர்வான அர்ப்பணிப்பாகும்.

உலகவங்கியின் நிதிப்பங்களிப்பில் கல்வியமைச்சின் வழிகாட்டலில் மிகச்சிறப்பாக அன்று கல்லூரி இயங்க பலர் உதவினார்கள். பிரதம ஆணையாளர் நிகால் கேரத், கோப்பாய் புனரமைப்புக் கழகம், அன்றைய மீள் குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் கே.என்.டக்லஸ் தேவானந்தா, கட்டடம் கட்ட அருளாசி வழங்கிய அருட்கவி வினாசித்தம்பி ஐயா, மணல் மற்றும் பௌதீக வளங்களைக்கொண்டு வருவதிலுள்ள தடைகளை நீக்கிய கல்விக்கழகம் பேபி சுப்பிரமணியம், வித்தக விநாயகர் ஆலயத்தைக் கட்டித்தந்த செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி, அன்றைய தென்னிந்தியத் திருச்சபை ஆயர் அருட்தந்தை ஜெபநேசன் என இன்னும் பலர் உதவிகளை வழங்கினர்.

## கல்லூரியின் பயன்கள்

மாணவர்களுக்கு ஆசிரிய தொழில்வாய்ப்பு பெருமளவு கிடைக்கின்றது. யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பித்தல் உள்ளகப் பயிற்சியின்போது நவீன கற்பித்தல் முறைகள், செயற்றிட்டங்கள், பரிகாரக் கற்பித்தல்கள் செயல்நிலை ஆய்வுகள் சிறந்த முறையில் பிரயோகிக்கப்படுகின்றன. பாடசாலையைப் புரிதல் செயற்றிட்டம், செயல்நிலை ஆய்வு மாநாடுகள், பாடசாலையும் சமூகமும் செயற்திட்டம் அதிகஸ்ட பிரதேச மாணவர்களுக்கான க.பொ.த. சாதாரண தர கணித, விஞ்ஞான பாடங்களுக்கான களப்பயில்வுகள், மரம் நாட்டும் செயற்றிட்டம், தொடருறுகல்வி, ஆசிரியர் மத்திய நிலையங்களுடன் இணைந்து வழங்குகின்றமை. கல்வியமைச்சு, தேசிய கல்வி நிர்வாகத்துடன் இணைந்த கல்விச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல், புத்தாக்கங்கள், நூல்கள், சஞ்சிகைகள் உருவாக்கம் இவ்வாறு மிகப்பெரும் கல்விசார் தாக்க விளைவை வரையறுக்கப்பட்ட வளங்களுடன் யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி சாதித்துள்ளது. இங்கு கற்றவர்கள் சிறந்த ஆசிரியர்களாக, அதிபர்களாக, கல்விப்பணிப்பாளர்களாக, கல்வியியலாளர்களாக, சிறந்த கல்விச் சேவையாற்றிவருகின்றனர்.

இந்தவகையில் 2ஆவது பீடாதிபதியாக மு.யோகநாதன் 2006ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டார். இவர் மாணவ ஆசிரியர்களைக் கொண்டு கல்விசார், பௌதீகவள செயற்றிட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தினார். இயற்கை நேசனான இவர் பெருமளவு தென்னங்கன்றுகளை கல்லூரியில் நாட்டினார். இன்று அதன் பயன் பெருமளவு கிடைக்கின்றது. மிகவும் ஆழமாக அவதானிக்கும் திறன் இவரது ஆற்றலாகும். இது ஆசிரிய வாண்மைக்கு அவசியமானதாகும். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கத்தின் சிலை இவரது காலத்திலேயே கல்லூரியில் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியிற்கல்லூரி மாணவ ஆசிரியர்கள் கடுமையான ஒழுக்க விதிகளின் கீழ் பயிற்றுவிக்கப்படுவார்கள். எங்கு ஒழுக்கம், விழுமியங்கள், வகை கூறல்கள் சரியாக உள்ளனவோ அங்கே கல்வி மலரும் எனும் கோட்பாட்டுடன் கல்லூரியின் மூன்றாவது பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் 2013ஆம் ஆண்டு கல்லூரியைப் பொறுப்பேற்றார். கடுமையான நிர்வாகம் ஆனாலும் மாணவ, ஆசிரியர்கள் இவரை விரும்புவர். தூய்மையான அன்புள்ளம் கொண்டவர்.

## நவீன ஆசிரியத்துவம்

இன்றைய மாணவர்கள் குடும்ப, சமூக, தொடர்பு சாதன, போதைப்பொருள், கட்டிளமைப்பருவப் பிரச்சினைகளுடன் கல்விகற்க பாடசாலை வருகின்றார்கள். அவர்களை முந்தைய ஆசிரியர்கள் கையாள்வதைப் போல கையாளமுடியாது. மிகுந்த மனிதத்துவம், தந்திரோபாயம், வழிகாட்டல் ஆலோசனைப் தேர்ச்சிகள், புரிந்துணர்வு, மென் திறன்களைக் கற்பிப்பதற்கான சமூகத்திறன்கள், கடுமையான பயிற்சிகள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் வழங்கப்படுகின்றன. 2019ஆம் ஆண்டு கலாநிதி சு.பரமானந்தம் நான்காவது பீடாதிபதியாக பதவியேற்றார். தொடர்ந்து கொவிட் வைரஸ் காலம் கல்லூரி மருத்துவ நிலையமாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது. பல சவால்கள், பிரச்சினைகளுக்கு மத்தியில் பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் தனது சமூகத் திறன்களால் சவால்களை சாதனையாக்கினார். கொவிட் காலத்தில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முன்மாதிரியான கலைத்திட்டத்தை தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறப்பாக நடைமுறைப்படுத்திக் காட்டினார். கல்வி அமைச்சு ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கும் முன்மாதிரியைப் பின்பற்றி இந்தக் கலைத்திட்டத்தை நகர்த்தியமை சிறப்பான முன்மாதிரியாகும். இது ஆசிரியவாண்மைக்கு ஒரு முன்னுதாரணமாகும். இலங்கையிலே அதிகமான பாடநெறிகளை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கொண்டுள்ளது. ஆரம்பக் கல்வி, விசேட கல்வி, உடற்கல்வி, விஞ்ஞானம், கணிதம், சங்கீதம், நடனம், சித்திரம் ஆகியவற்றை தமிழ் மொழி மூலமும், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவை ஆங்கில மொழி மூலமும் பயில்வுகள் சிறப்பாக நடைபெறுகின்றன. தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவ ஆசிரியர்கள் மகிழ்வாகக் கற்கின்றனர். இந்தநிலையில் 2024ஆம் ஆண்டு தி.ஜெயகாண்டீபன் பீடாபதிபதி ஆனார். அவர் நவீன ஆசிரியர் தொழில்சார் தேர்ச்சிகளிலும், ஆசிரியத்துவ பிரதிபலித்தல், செயல்நிலை ஆய்வுத் துறைகளிலும் நிபுணத்துவ ஆற்றல் கொண்டு மாணவ ஆசிரியர்களைச் சிறப்பாக வழிப்படுத்தினார். சிறந்த கற்பித்தலுக்கான உறுதியான ஆளுமையும், ஆற்றலும் கொண்ட முன்மாதிரியான கற்பித்தல் கலைஞராகத் தொழிற்பட்டார். இது இன்றைய ஆசிரியர்களுக்கு அவசியமான தேர்ச்சியாகும்.

வரையறுக்கப்பட்ட வளங்களுடன் சிறப்பாக இயங்கிய கல்லூரியின் கட்டடங்கள் கட்டி இருபத்தைந்து வருடங்களாகிறது. பல திருத்த வேலைகள், மின்சாரம், நீர் இணைப்புகள் முற்றாக மறுசீரமைக்க வேண்டும், விடுதிகள் விஸ்தரிக்கப்படவேண்டும், கலைத்திட்ட அமுலாக்கம் மேலும் இற்றைப்படுத்தப்பட வேண்டும், மனித வளவலுவூட்டல், ஒருங்கிசைவு உறுதிப்படுத்த பயிற்சிகள், மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும், பாடசாலைகளுடன் மேலும் உயிர்ப்பான தொடர்பாடல்களை மேற்கொண்டு நுண்முறைக்கற்பித்தல், மாதிரிக் கற்பித்தல், களப்பயணங்கள், சர்வதேசஆசிரிய வாண்மைப் பயில்வுகளுக்கு இணையான செயற்திட்டங்கள் தேவையாகவுள்ளன. இதன் வளர்ச்சியாக ஓர் ஆசிரிய தொழில்துறைப் பல்கலைக்கழகமாக உரிய கட்டுப்பாடுகளுடன் கல்லூரி உருவாக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி வெள்ளிவிழா ஆண்டுப் பீடாதிபதியாக இரா. லோகேஸ்வரன் பொறுப்பேற்றுள்ளார். மாணவ ஆசிரியர்கள் சார்பாக நிறைந்த கரிசனையுடன் வாடிக்கையாளர் திருப்தி மூலம் மனிதவள மேம்பாட்டை ஏற்படுத்த முடியும் என்ற வகையில் பல முகாமைத்துவ தேவை திருப்தி அணுகுமுறைகளைப் பிரயோகித்து செயலாற்றுகைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகின்றார். கல்வியமைச்சரும், பிரதமருமான ஹரிணி அமரசூரிய கல்லூரிக்கு விஜயம் செய்ததுடன் நாடாளுமன்றத்திலும் கல்லூரியில் பல தேவைகள் உண்டு அவற்றைத் தீர்த்து வைப்போம் எனவும் உரையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்ந்தும் சிறப்பான வளர்ச்சியடையும். கடந்த இருபத்தைந்து வருடங்கள் உழைத்த அனைவருக்கும் இறையருள் கைகூட வேண்டும். இந்தக் கல்லூரி மென்மேலும் வள்ச்சி காணவேண்டும்.

# மரண அறிவித்தல்

## செல்வி தவராசா டிலக்சி

**(யா/இந்து மகளிர் கல்லூரி, பழைய மாணவி)**



சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி தவராசா டிலக்சி அவர்கள் நேற்று (13.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தவராசா - கேதீஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகளும், கேசவன், பிரவீன் (யா/ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி - மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பரமேஸ்வரி (பலாலி), காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, மகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தோற்றம்** 15.06.2002 — **மறைவு** 13.05.2025

**தகவல்: குடும்பத்தினர்**
**077 163 8971**
**சிறுப்பிட்டி தெற்கு,நீர்வேலி.**

(CS/58237) J-1

# மரண அறிவித்தல்

## திரு. இராமசாமி சோமசுந்தரம்

**(முன்னாள் யாழ் பரிஸ் ரெக்ஸ் உரிமையாளர்)**



புங்குடுதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், (பெருங்காடு) 105 அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராமசாமி சோமசுந்தரம் அவர்கள் (12.05.2025) திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமசாமி - கண்மணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மபூபதி அவர்களின் அன்புக் கணவரும், பிரதீபன், பிரபாகரன், பிறேம்நாத், பிரபாலினி, ராஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாங்கனி, மைதிலி, தனுஷா, மேர்வின், திருமாறன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஐஸ்வர்யா, அக்ஷேய், அஸ்வினி, நீரன், யஷ்வன், திரிஷ்டன், ஜதுனன், யஷ்வி, லக்ஷ்வி, யுவன், அக்ஸல், ஷான்வி, இனியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி, பொன்னம்மா மற்றும் மங்கயற்கரசி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்மலஷ்மி, ராஜா, செல்வராசா, காலஞ்சென்ற தர்மரெத்தினம், தர்மகுலசிங்கம், மற்றும் தர்மலீலா, தர்மசுசீலா, ஸ்ரீராணி, மகாலெட்சுமி, மகாலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, (15.05.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**மண்ணில்** 02.02.1944 — **விண்ணில்** 12.05.2025

**தகவல்: குடும்பத்தினர்**
**பிரபாகரன் - 0094 777 889 455**
**105, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.**

(CR/44987) J-1

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்தாது

## விமல் வீரவன்ஸ ஆரூடம்

**கொழும்பு, மே 14**

**இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்புத் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அரசாங்கம் பகிரங்கப்படுத்தும் என்ற நம்பிக்கை இல்லை என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்றுணிவுடன் செயற்பட்டார். அந்தத் தற்றுணிவு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இல்லை.

பெரும்பான்மைப்பலம் உள்ளது என்ற ஆணவத்தில் அரசாங்கம் தான்தோன்றித்தனமாகச் செயற்படுகிறது. கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்துக்கும் பெரும்பான்மைப் பலம் இருந்ததையும், அந்தப் பலம் இரண்டாண்டுக்குள் பலவீனமடைந்ததையும் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

இந்தியாவுடன் அரசாங்கம் அண்மையில் கைச்சாத்திட்ட ஒப்பந்தங்களின் விவரங்கள் இதுவரையில் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதாயின் அதற்கு இந்தியாவின் அனுமதி பெறவேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது வேடிக்கையானது. சர்வதேச நாணய நிதியத்தின் விவகாரத்தில் அரசாங்கம் நாணயநிதியத்தின் சகல நிபந்தனைகளுக்கும் அடிபணிந்துள்ளது. மின் கட்டண அதிகரிப்பு ஊடாக அதை எதிர்வரும் மாதமளவில் விளங்கிக்கொள்ளமுடி யும் - என்றார். (எ-இ)

# தீயில் எரிந்து பெண் சாவு

கொழும்பு, மே 14

கொட்டாவை, ருக்மல்கம வீதி, விஹார மாவத்தையிலுள்ள தனது வீட்டுக்குள் எரிந்து இறந்த நிலையில் கண்டெடுக்கப்பட்ட 19 வயது பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கொட்டாவைப் பொலிஸார் விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பவம் நடந்தபோது பாதிக்கப்பட்டவரின் தாயார் மற்றும் இரண்டு சகோதரர்கள் வெசாக் நிகழ்வுகளைப் பார்ப்பதற்காக வீட்டிலிருந்து சென்றனர் எனக் கூறப்படுகிறது. (ச-இ)


## வேலை ஆட்கள் தேவை

மேசன் கூலி ஆள் தேவை

மேசன்-3800/=

கூலி-2800/=

தொடர்புகளுக்கு:

075 203 9589


# பெருவிழா

யாழ்.., மே 14

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளன.

தினமும் காலை 7.45மணிக்கும் மாலை 5.45மணிக்கும் வசந்தமண்டபப் பூஜை இடம்பெறும். எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று 8.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப்பூஜையும் 9.30மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ச-41)


## (22) விற்பனைக்கு (22)

1. யாழ் வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக்கடையும்.
2. யாழ் வைத்தியசாலை வீதியில் மரக்கறி சந்தைக்கு முன்பாக 52 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட கடைத்தொகுதியும்.
3. யாழ் வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 06 பரப்பு காணியும்
4. யாழ் பழைய Post Office வீதியில் சம்பத் வங்கிக்கு முன்பாக 200 அடி அகலமும் 150 அடி நீளமும் கொண்ட மாடிக் கட்டடமும்
5. யாழ் ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்திக்கு அண்மையில் 50 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 4 மாடி கட்டடமும்
6. யாழ் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 12 பரப்பு காணியும்
7. யாழ் Brown வீதியில் Brown வீதி முகப்புடன் 04 பரப்பு காணியும்
8. யாழ் சிவகுருநாதர் வீதியில் 04 பரப்பு காணியும்
9. யாழ் வைத்தியசாலை வீதியில் லேடன் கம்பனிக்கு முன்பாக 06 பரப்பு காணியும்
10. அரியாலை கிழக்கு பூம்புகாரில் 10 ஏக்கர் காணியும்
11. யாழ் விக்டோரியா வீதியில் 12, 16 பரப்புக் காணியும்
12. யாழ் பலாலி வீதியில் S.V.M எரிபொருள் நிலையத்திற்கு முன்பாக 42 அடி அகலமும் 130 அடி நீளம் கொண்ட காணியும்
13. யாழ் மின்சார நிலைய வீதியில் 1 1/2 பரப்பு, 02 பரப்பு, 03 பரப்பு, 06 பரப்பு காணியும்
14. யாழ் மானிப்பாய் வீதியில் ஈழநாடு பித்திரிகை காரியாலயத்திற்கு முன்பாக 05 பரப்பு காணியும்
15. யாழ் சுதுமலை அம்மன் கோயிலுக்கு அண்மையில் 05 பரப்பு காணியும்
16. யாழ் ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 04 கடை அமைந்த கட்டடத் தொகுதியும்
17. யாழ் கஸ்தூரியார் வீதியில் கபிலா காலணியகத்திற்கும் வின்சன் சந்திக்கும் அண்மையில் 04 கடைகளும்
18. யாழ் K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பு காணியும் கட்டடமும்
19. நிலாவரையில் 80 பரப்பு காணியும்
20. யாழ் நல்லூர் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்பு காணியும்
21. யாழ் நல்லூர் கோயில் வீதிக்கு அண்மையில் 1 1/2 பரப்பில் அமைந்த மாடி வீடும்
22. மன்னார் வைத்தியசாலை வீதியில் 04 பரப்பு காணியும் 1 1/2 பரப்பில் அமைந்த மாடி வீடும் உடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
கனகசபை: தர்மகுலசிங்கம்
077 723 2535

இல: 183 காலி வீதி,
வெள்ளவத்தை
இல: 185 மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்,

கடந்த 18.04.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்

# V.T. சிவலிங்கம்

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 16.05.2025 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரை மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வு "நாச்சிமார் ஆலய மண்டபத்தில்" நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**16/04 சீனியர் வீதி,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**
**0769636390/0776646963**

**இங்ஙனம்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 11 . 1930



மறைவு 11 . 05 . 2025

### திரு நாகரட்ணம் கந்தசாமி (சாமியார்)

**(ஞானதேவன் கராஜ் உரிமையாளர்)**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிறாம்பியடி வீதியை பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும் அம்மன்வீதி கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு நாகரட்ணம் கந்சாமி அவர்கள் கடந்த (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம்-கண்மணி தம்பதியின் இரண்டாவது புத்திரனும், காலஞ்சென்ற செல்லையா-வள்ளியம்மை அவர்களின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற ஞானேஸ்வரி அவர்களின் அன்பு கணவரும், வாமதேவன் (ஓய்வுபெற்ற தொழினுட்பவியலாளர்-கொழும்பு), இந்திரதேவன் (இத்தாலி) ஜெயதேவன் (சுவிஸ்), ஜெயந்தி, ரசந்தி (ஜேர்மனி), ஞானதேவன் (ஜேர்மனி), நித்தியானந்தம் (பிரான்ஸ்), சாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திராதேவி (.கொழும்பு), ஜொனிற்றா (இத்தாலி), இராசமணி (சுவிஸ்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன், கலாமோகன் (ஜேர்மனி) தேவமனோகரி (ஜேர்மனி), தயாநிதி (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜனனி (செயற்திட்ட முகாமையாளர், கொழும்பு), றொபேர்ட் (முகாமையாளர், இத்தாலி), திருமதி ஜெயபாரதி, சுயந் (தாதி சுவிஸ்), சனார்த்தனன் (கணினி தொழினுட்ப வியாலாளர்-சுவிஸ்), ரமணன் (தொழினுட்ப பரிசோதனையாளர்-ஜேர்மனி), கார்த்திக் (மின் பொறியியளார் ஜேர்மனி), ரமணி (வங்கி அலுவலர்-ஜேர்மனி), திருமதி.தேனுஜன், சுபத்திரா (கணக்காளர் ஜேர்மனி) திருமதி தெனுசா வீரதினேஷ் (சட்ட உதவியாளர் ஜேர்மனி தேனுசன் (சிரேஷ்ட முகாமையாளர் ஜெர்மனி) விசாகி (பொறியியல் மாணவி பிரான்ஸ்), நிலோஜன் பிரான்ஸ்) வினோதன் (உவா வெல்லச பல்கலைக்கழகம்), ஏற்றுமதி விவசாயம்), சாகிர்த்தியா (கொழும்பு, மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புப் பேரனும், சாயின் (சுவிஸ் , வீராதீரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் அமரர் சிவராசா, அமரர் கனகலிங்கம், அமரர் தணிகாசலம், புனிதவதி, சண்முகசுந்தரம், அமர் குமாரகுரு பாஸ்கரன், லீலாவதிஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, அமரர் மகேஸ்வரி, சண்முகதாஸ், அமரர் கனகதாஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2025) வியாழக்கிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**021 221 7616, 0774940541**

# நன்றி நவிலலும் சபிண்டிகரண அழைப்பும்



கடந்த (15.04.2025) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் மயில்வாகனம் விக்கினேஸ்வரன் (ஈசன்)

அவர்கள் சிவபதமடைந்து துயருற்றிருந்த வேளையில் எம்முடன் தோளோடு தோள்நின்று உதவி புரிந்தோர்கள் ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு துயரத்தை பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவிப்பதுடன் இன்று (14.05.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம்.**

நல்லதம்பி வீதி,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்
076 156 2001, 077 401 6789

(CS/58236)J-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
22
05
1956



மறைவு
13
05
2025

## அமரர் நாகமணி சிவராமன்

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்-வவுனியா நகரசபை மற்றும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை)

பதுளையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, ஓயார்சின்னக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகமணி சிவராமன் அவர்கள் நேற்று (13.05.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி-செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சிவக்கொழுந்து தம்பதியின் பாசமிகு மருமகனும் செந்தில்மணி அவர்களின் அன்புக் கணவரும் செந்தூரன் (N.வைத்திலங்கம் கம்பனி-வவுனியா), லாவண்யா, கோபிராம் (உத்தியோகத்தர்-வவுனியா மாவட்ட செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அசோதரன், திலக்ஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் பரமேஸ்வரி (கனடா), தேவதாஸ் (ஜேர்மனி), R.N.லோகேந்திரலிங்கம் (நிர்வாக இயக்குனர்-கனடா உதயன் பத்திரிகை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இலட்சுமணசாமி, காலஞ்சென்ற தங்கமலர் (பாப்பா) மற்றும் சாவித்திரி (ஜேர்மனி), பத்மலோசினி (கனடா), காலஞ்சென்ற சந்தானலட்சுமி (கனடா), ஜெகதாம்பிகை (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.05.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஓயார் சின்னக்குளத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல-12/01, 2ம் ஒழுங்கை,
ஓயார் சின்னக்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
அசோதரன் (மருமகன்)-074 269 3804
செந்தூரன் (மகன்)-077 611 4257
கோபிராம் (மகன்)-077 698 3460

# INVITATION FOR BID 2025/05
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
   "Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987".
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-05-14 To 2025-05-28 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-05-14 To 2025-05-28 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-05-21 |
| | Closing and Opening of Bids | At 2.00 P.M on 2025-05-29 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2025/OS/01(R ) | Construction of Burning Shed at Inthan Cemetry, Vali East PS | 1.10 | 63 | C9 or above (Building) | 1,000.00 | 12,000.00 | 14.08.2025 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha, Puttur.

(CR/44988) J-1

14/05/2025

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
17
01
1945



மறைவு
14
04
2025

## கந்தையா மாணிக்கம்

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்டநிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றி விட்டவரே......
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே.....
வாழ்வுக்கு இலக்கணமாய்
வாழ்ந்து காட்டிய - அப்பா
இன்னும் சில காலம் எங்களோடு
வாழ மறந்ததேன் அப்பா?
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்ந்த எங்கள் அன்புத்தெய்வம்
எங்கள் மனம் அப்பாவை
தேடி நிற்கிறது துவண்டு நிற்கின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

320/2 , நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/58239) J-1

## செம்மணி...

செம்மணி சிந்துபாத்தி மயானத்தில்,
கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில்
அபிவிருத்திப் பணிகளுக்காக குழிகள்
வெட்டப்பட்டபோது அதற்குள் இருந்து
மனித என்புச் சிதிலங்கள் அவதானிக்
கப்பட்டன. இது தொடர்பில் பொலிஸா
ரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு
அமைய, விடயத்தை பொலிஸார் நீதி
மன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு
சென்றார்கள்.

இதைத் தொடர்ந்து பெப்ரவரி மாதம்
20ஆம் திகதி சம்பவ இடத்தில் நீத
வான் ஆய்வுப் பணிகளை மேற்
கொண்டார். இதன்போது, மனிதச்
சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியை
ஸ்கான் ஆய்வுக்கு உட்படுத்தவும்,
தொடர்ந்து அகழ்வுப் பணிகளை முன்
னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.
இதன் தொடர்ச்சியாகவே, நாளை
அங்கு அகழ்வாய்வு இடம்பெறவுள்ள
தாகத் தெரியவருகின்றது.

துறைசார் வல்லுநர் பேராசிரியர் சோம
தேவ தலைமையில் இந்த ஆய்வுப்
பணிகள் இடம்பெறவுள்ளன. பேராசிரி
யர் சோமதேவ கடந்த மூன்றாம் திகதி
யன்று மனிதச் சிதிலங்கள் அவதானிக்
கப்பட்ட இடத்தில் கண்காணிப்புப்
பணிகளில் ஈடுபட்டார் என்பதும் குறிப்
பிடத்தக்கது. (அ-ம-26)

## இணுவில்...

தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த
மாதம் அல்பேனியாவில் நடைபெற்ற
மேற்காசிய இளையோர்களுக்கான
தொடரிலும் எனது மகள் விளையாடக்
கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால்,
நிதி அனுசரணை இல்லாத காரணத்
தால் அதில் எனது மகள் கலந்துகொள்
ளவில்லை.

கடந்த வருடம் தேசிய ரீதியாக நடை
பெற்ற சதுரங்க போட்டியில் முதலி
டத்தைப் பெற்று, இலங்கையின் 8 வய
துக்குட்பட்ட பெண்கள் பிரிவில் உத்தி
யோகபூர்வ வீராங்கனையாகத் தெரிவு
செய்யப்பட்டு தாய்லாந்தில் நடை
பெற்ற ஆசிய பாடசாலைகள் இறுதிப்
போட்டியில் கலந்துகொண்டு இரண்டு
சர்வதேச வெண்கலப் பதக்கத்தை
பெற்றுக்கொண்டார். மேலும் கடந்த
டிசெம்பர் மாதம் உலகளவிலான ரப்
பிட் செஸ் தரப்படுத்தலில் இரண்டாவது
இடத்தில் காணப்பட்டார்.

எனவே தொடர்ந்து சர்வதேசப் போட்டி
களில் எமது நாட்டைப் பிரதிநிதித்துவப்
படுத்தி விளையாடுவதற்கு நிதி தேவை
யாகவுள்ளது. நிதி அனுசரணையாளர்
கள் ஆதரவு வழங்கும் பட்சத்தில் எனது
மகள் மேலும் பல போட்டிகளில் பங்கு
பற்றி எமது மண்ணுக்கு பெருமை
சேர்ப்பார் - என்றார். (அ-ம-27)

## கிளிநொச்சி...

நடைபெற்றுள்ளது.

மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்
கும் தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பி
னர்களுக்கும், தமிழரசுக் கட்சியின்
கிளிநொச்சி மாவட்டக் கிளை நிர்வாக
உறுப்பினர்களுக்குமிடையே நேற்று
முன்தினம் நடைபெற்ற கலந்துரையா
டலின் போதே இந்தத் தெரிவுகள்
இறுதிசெய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய கரைச்சிப் பிரதேசசபை
யின் தவிசாளராக அருணாசலம் வேழ
மாலிகிதன், உப தவிசாளராக புஸ்பநா
தன் சிவகுமார் ஆகியோரும், பூநகரி
பிரதேச சபையின் தவிசாளராக சிவகு
மாரன் ஸ்ரீரஞ்சன், உபதவிசாளராக
திருமதி குணலக்சுமி குலவீரசிங்கம்
ஆகியோரும், பச்சிலைப்பள்ளிப் பிர
தேசசபையின் தவிசாளராக சுப்பிர
மணியம் சுரேன், உபதவிசாளராக
சிவகுரு செல்வராசா ஆகியோரும்
தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தெரிவுகள் தொடர்பிலான
மாவட்டக்கிளையின் எழுத்துமூல தீர்
மானம், கிளிநொச்சி மாவட்டக் கிளைத்
தலைவரும், நாடாளுமன்ற உறுப்பின
ருமான சிவஞானம் சிறீதரனால் கட்சி
யின் பதில் தலைவரிடம் நேரடியாக
கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பி
டத்தக்கது. (அ-ம-125)

## சம்பளம்...

படவில்லை.

மாதாந்தம் 8ஆம் திகதி அவர்களுக்
கான ஊதியம் வழங்கப்படும் நிலை
யில், இந்த மாதத்துக்கான சம்பளத்
திகதியில் இருந்து, கிட்டத்தட்ட ஒரு
வாரகாலம் கடக்கின்ற போதிலும் ஊதி
யம் இதுவரை வழங்கப்படவில்லை
எனக் கூறப்படுகின்றது. பண்டிகை
காலம் இடம்பெற்றுவரும் நிலையில்,
தமக்கான சம்பளம் வழங்கப்படாமை
யால் தாம் நிதி நெருக்கடியை எதிர்
கொண்டுள்ளதாக அவர்கள் கவலை
தெரிவித்துள்ளனர். (அ-ம-110)

## கொழும்பு...

கள் தடையாக இருக்கக்கூடாதென
மக்கள் விடுதலை முன்னணியின்
பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவித்
துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி
அமைக்கும்போது, செயற்படக்கூடிய
சட்டம் ஒன்று இருக்கிறது. அதனால்
அரசாங்கம் தங்களுக்கு பெரும்
பான்மை இல்லாத சபைகளுக்கு
பெரும்பான்மையை ஏற்படுத்திக்
கொள்ள முயற்சிப்பதற்கு முன்னர்
அது தொடர்பான சட்டத்தை முறை
யாக வாசித்துப்பார்க்கவேண்டும்.

தேர்தலில் எந்தவொரு கட்சியும் அந்த
பிரதேச உள்ளூராட்சிசபையில் பெரும்
பான்மையைப் பெற்றுக்கொள்ள முடி
யாமல் போனால், அந்த சபைகளின்
தலைவர் அல்லது மேயரை வாக்களிப்
பின் மூலமே தெரிவுசெய்ய வேண்டும்.
இதுவே அரசமைப்பால் குறிப்பிடப்பட்
டுள்ள நடைமுறையாக உள்ள நிலை
யில், ரில்வினின் கருத்துகளை நாங்
கள் கணக்கெடுக்கப்போவதில்லை.

கொழும்பு மாநகரசபையில் ஐக்கிய
மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு பல
கட்சிகள் ஆதரவை வழங்க முன்வந்
துள்ளன. பேச்சுவார்த்தைகள் 90
வீதம் வெற்றிபெற்றுள்ளன. கொழும்பு
மாநகரச்பையை அரசாங்கம் கைப்பற்
றுவதற்கு நாங்கள் அனுமதிக்கப்
போவதில்லை - என்றார். (அ-ம-இ)

## இலங்கையின்...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழல், மோசடிகளால் இலங்கை அர
சாங்கம் கடும் நெருக்கடிகளைச் சந்தித்
திருக்கின்றது. கடந்த காலங்களில்
இலங்கையின் ஊழல் மோசடிகளால்
ஜப்பான் பெரியளவில் பாதிப்பை எதிர்
கொண்டது. இவ்வாறான நிலைமை
களை எதிர்காலத்தில் தவிர்த்துக்
கொள்வதற்காக தற்போதைய அர
சாங்கம் பொருத்தமான வழிமுறை
களைப் பின்பற்றும் என்று நம்புகின்
றோம்.

ஊழலை ஒழிக்கும் இலக்குடன் ஜனா
திபதி அநுரகுமார திஸாநாயக்க ஊழல்
ஒழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்
திருக்கின்றமை மகிழ்ச்சிக்குரியது.
இவ்வாறான ஊழல் ஒழிப்புத் திட்டங்
கள் முன்னெடுக்கப்படுவது அத்தியா
வசியமானது என்பதுடன், அவற்றை
நாங்கள் வரவேற்கின்றோம்.

இனிவரும் காலங்களில் ஜப்பானின்
முதலீட்டுத்திட்டங்களை இலங்கையில்
முன்னெடுப்பது குறித்து ஆராயப்ப
டும். எனவே அதற்குப் பொருத்தமான
சூழலை இலங்கையில் உருவாக்குவ
தற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன்
செயற்பட வேண்டும் - என்றார். (அ-ம)

## அமைச்சரவையில்...

கின்றது. உள்ளூராட்சிசபைத் தேர்தல்
முடிவடைந்துள்ள நிலையில் அமைச்
சரவை மறுசீரமைப்பு இடம்பெறவுள்
ளது எனவும், பிரதமர் பதவியிலும்
மாற்றம் வரவுள்ளது எனவும் தகவல்
கள் வெளியாகின. இவ்வாறான பின்
னணியிலேயே, அமைச்சரவையில்
மாற்றங்களைச் செய்யும் நிலைப்பாட்
டில் அரசாங்கம் இல்லை என்று தெரி
யவருகின்றது. கடந்த 6 மாத காலப்ப
குதியில் அரச நிறுவனங்கள் செயற்
பட்ட விதம் தொடர்பில் ஜனாதிபதி
அறிக்கை பெற்றுள்ளார் எனவும்
அறியமுடிகின்றது. (அ-ம-44)

# 9 லட்சம் ரூபாவுக்கு ஏலம்போன சேலை!

யாழ்ப்பாணம், மே 14

புங்குடுதீவு கண்ணகை அம்பாளுக்கு
சாற்றிய சேலை 9 லட்சம் ரூபாவுக்கு
ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்தில் தீர்த்த உற்சவமா
னது நேற்று வெகுசிறப்பாக நடைபெற்
றது. இதன்போது அம்பாளின் சேலை
கள் ஏலத்தில் விடப்பட்டன. இதன்
போதே, ஒரு சேலை லட்சம் ரூபாவுக்கு
ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. (ம-27)

# தண்ணீர்த்தாங்கி விஷமிகளால் சேதம்

யாழ்ப்பாணம், மே 14

சுழிபுரம் மேற்கு கலைமகள் விளை
யாட்டுக் கழக மைதானத்தில் அமைக்
கப்பட்டிருந்த தண்ணீர்த்தாங்கி கடந்த
இரு தினங்களுக்கு முன்னர் விஷமிக
ளால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.
புலம்பெயர் உறவுகளின் நிதிப்பங்க
ளிப்புடன் பசுமைப் புரட்சி திட்டத்தின்
கீழ் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்த்
தாங்கியே இவ்வாறு அடித்து நொருக்
கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை
பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு
வழங்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக
விசாரணைகள் முன்னெடுக்கப் பட்
டுள்ளன. (ம-125)



# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வுடன் காணிகள்!

### பெருந்தோட்ட அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, மே 14

பெருந்தோட்ட மக்களுக்கு சம்பள அதி
கரிப்பு மாத்திரமின்றி, காணிகளும்
வழங்கப்படும் என்று அரசாங்கம் அறி
வித்துள்ளது.

இது தொடர்பில் பெருந்தோட்ட மற்றும்
சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த
வித்தியாரத்ன தெரிவித்ததாவது:

பெருந்தோட்ட மக்களுக்கு சம்பள அதி
கரிப்பு நிச்சயம் வழங்கப்படும். வரவு
செலவுத் திட்டத்திலும் பெருந்தோட்டத்
தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700
ரூபா சம்பளம் வழங்கப்படும் என
ஜனாதிபதி அநுர உறுதியளித்திருக்
கின்றார். இந்த சம்பள அதிகரிப்பை
விரைவில் வழங்குவோம் என்று உறு
தியளிக்கின்றோம்.

பெருந்தோட்டக் கம்பனிகளுடன்
தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் முன்
னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த
மக்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டு
200 ஆண்டுகள் நிறைவடைந்துள்
ளன.

எனவே அவர்களுக்கு சம்பள அதிக
ரிப்பு மாத்திரமல்ல, பல அடிப்படை
உரிமைகள் வழங்கப்பட வேண்டியுள்
ளன. ஏராளமான மக்கள் சொந்தக்
காணிகள் இல்லாமலும் சொந்த வீடு
கள் இல்லாமலும் வாழ்கின்றனர்.
எனவே, இந்த வருடத்தில் பெருந்
தோட்ட மக்களுக்காக 6 ஆயிரம் வீடு
களை அமைப்போம் - என்றார். (ம-இ)



யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வெசாக் தின நிகழ்வு யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாராதிபதி மீஹாஹ ஜந்துரே ஸ்ரீவிமல தேரர் வெசாக்தினம் தொடர்பாக ஆசியுரை ஆற்றினார். (ச-25,66)



மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றிய சனசமூக நிலையத்துடன் இணைந்த கல்வி நிலையக் கட்டடத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கலந்துகொண்டார். (ச-25,66)



மன்னார் மாதோட்ட ரஜ மகா விகாரையின் விகாராதிபதி தலைமையில், ரஜமகா விகாரையில் வெசாக்தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன. (ச-25,56)



ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. நூற்றுக் கணக்கான அடியவர்கள் புடைசூழப் புதிய சித்திரத் தேரில் வள்ளி தெய்வானை சமேதராக ஆறுமுகப் பெருமான் ஆரோகணித்தார். (ச-66)



கிளிநொச்சி இரணைமடுக்குளத் தீர்த்தக்கரையில் சித்திராப் பௌர்ணமி தினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை, பொதுமக்கள் பலர் பிதிர்த் தற்பணம் செய்து தானம் வழங்கினர். (ச-25,113)



# இலவச மருத்துவ முகாம்

அனலைதீவு பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் அனலைதீவு மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. யாழ்.போதனா மருத்துவமனையைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் முகாமில் கலந்துகொண்டு சிகிச்சை வழங்கினர். (ச-25,9)



வெசாக் பௌர்ணமி தினமான நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இராணுவத்தினரின் ஏற்பாட்டில் விசுவமடு சந்திப்பகுதியில் பனீஸ் மற்றும் தேனீர் தானம் வழங்கப்பட்டது. (ச-41-113)



உரும்பிராய் ஞான வைரவ கோவிலடி சனசமூக நிலையத்தின் முழுநிலா நாள் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.
கருத்தரங்கில் பிரான்ஸ் நாட்டில் வெளிவரும் “வளர்” சஞ்சிகையின் ஆசிரியர் மனோ சின்னத்துரை கலந்துகொண்டு “எமது வாழ்வும் சவால்களும்” எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். (ச 25)

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர்,
கல்வியங்காடு, திருநெல்வேலி
ஆகிய பகுதிகளில்
வீடு வாடகைக்கு தேவை.

**077 919 1529**

**காணி விற்பனைக்கு**

கைதடி வடக்கு போக்கத்தனையில்
தோட்டம் செய்யவும், குடியிருக்கவும்
பொருத்தமுள்ள 3 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
(CS/52227) J-1

தொடர்பு:- **077 730 4207**

# வீதி விபத்தில் கான்ஸ்டபிள் சாவு

கொழும்பு, மே 14

சிலாபம் - கொழும்பு வீதியில் கார் ஒன்று மோதியதில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு பொலிஸ் கான்ஸ்டபிள் மாரவில ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.